RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 10 • இதழ் 4 • அக்டோபர் 2025 • விலை ரூ.18/-

வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

எண்ணங்கள்

தன்னம்பிக்கை

சிறப்பிதழ்

LINEN PARK®
DHOTIS • SHIRTS • TROUSERS • FABRICS
by
RAMRAJ
Crafted to Dominate with comfort, style and pure class
STORE LOCATION
Available at Ramraj Showrooms And All Leading Textile Shops

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

‘நம்மால் முடியும்’ என்ற நம்பிக்கையை முழுமையாகப் பெற்று, தன்னம்பிக்கையுடன் செயல்களில் இறங்கி ஜெயித்துக் காட்டி, நிறைவும் வளமும் பெற்று நல்வாழ்வு வாழ வழிகள் சொல்லும்

தன்னம்பிக்கை
சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மதிப்பிற்குரியவர்களுக்கு...

வணக்கம்.

உணவு, உடை, இருப்பிடம் இவை மூன்றும் மனிதர்களின் அடிப்படைத் தேவைகள். இந்த மூன்றையும்விட முதன்மையான அடிப்படைத் தேவை ஒன்று இருக்கிறது. அது இருந்துவிட்டால் இந்த மூன்றையும் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மேலும் கல்வி, தொழில், செல்வ வளம் போன்ற வாழ்வின் மற்ற முக்கிய அம்சங்களும் எளிதில் கிடைத்துவிடும். அந்த முதன்மையான மனித அடிப்படைத் தேவையின் பெயர், தன்னம்பிக்கை. நமக்குள் தன்னம்பிக்கை இருந்துவிட்டால், மற்றவர்களும் நம் மீது நம்பிக்கை வைப்பார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு செய்தித்தாள் படிக்கும்போது, 'புத்தகம் வாங்க அதிகாலை முதல் வரிசையில் காத்திருக்கும் மக்கள்' என்ற செய்தி புகைப்படத்துடன் பிரசுரமாகி இருந்தது. அதைப் படித்தபோது எனக்குப் பெரிய ஆச்சர்யமாக இருந்தது. அந்தப் புத்தகம் பற்றியும், அதை எழுதியவர் பற்றியும் விசாரித்தேன்.

'ஹாரிபாட்டர்' என்ற தலைப்பின் வரிசையில் வருகின்ற புத்தகங்களைச் சிறியவர்கள், பெரியவர்கள் என்கிற வித்தியாசம் இல்லாமல் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் படிக்கிறார்கள் என்பதையும், அந்தப் புத்தகத்தை மையமாக வைத்துப் பல பாகங்களாக 'ஹாரிபாட்டர்' திரைப்படங்கள் வந்ததையும் அறிந்துகொண்டேன். 'ஹாரிபாட்டர்' நூல்களை எழுதிய ஜே.கே.ரௌலிங் என்கிற பெண் எழுத்தாளரைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆச்சர்யம் அடைந்தேன்.

இன்று உலகப் புகழ்பெற்ற கோடீஸ்வர எழுத்தாளராக விளங்கும் ஜே.கே.ரௌலிங்கின் இளமைப்பருவ வாழ்க்கை வறுமை, தோல்வி, நிராகரிப்பு, அவமானம் எனப் பலமுனைத் தாக்குதல்கள் நிறைந்தே இருந்தது. யார் துணையும் இல்லாமல், இங்கிலாந்து நாட்டில் எடின்பரோ என்ற நகரில் ஒரு சிறிய குடியிருப்பில் வாழ்ந்து, தனது குழந்தையை வளர்த்தார். சரியான வேலைவாய்ப்பு இல்லை. பல நெருக்கடிகளுக்கு இடையில் 'ஹாரிபாட்டர்' நாவலை எழுதினார். அந்த நாவலை 12 பதிப்பகங்கள் நிராகரித்தன. "இந்தக் கதை வாசகர்களைக் கவராது. யாரும் படிக்க மாட்டார்கள்" எனப் பல பதிப்பகங்கள் சொன்னபோது தன்னம்பிக்கைக் குறையாமல் தொடர்ந்து முயற்சி செய்தார். சில நாட்கள் உணவு இல்லாமல் பசியோடு அலைந்திருக்கிறார். "ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறாய்? கதை எழுதி, புத்தகம் விற்று வாழ்வதெல்லாம் இனிமேல் நடக்காது. வேறு ஏதேனும் ஒரு வேலை தேட முயற்சி செய்" என்று சுற்றி இருந்தவர்கள் அறிவுரை வழங்கினர்.

எதனாலும் நம்பிக்கையைத் தளரவிடாமல், ரௌலிங் தனது திறமையை நம்பினார். தோல்விகள் துரத்தினால் இன்னும் கடுமையாக உழைக்கத் தயாராக இருந்தார். திறமையையும், உழைப்பையும் அவர் கைவிடவே இல்லை. அவை இரண்டும் அவரையும் கைவிடவில்லை. வறுமையில் வாடிய ஓர் எழுத்தாளர், இன்று உலகப் புகழ்பெற்ற கோடீஸ்வர எழுத்தாளர். தோல்விகள், நிராகரிப்புகளை எப்படிக் கடந்து வந்தீர்கள் என அவரிடம் கேட்டபோது, "நாம் நம்மை நம்பவில்லை என்றால், வேறு யாரும் நம்மை நம்ப மாட்டார்கள். நான் நிச்சயம் வெற்றி பெறுவேன் என முழுமையாக நம்பினேன்" என்று சொன்னார் அவர். இதற்குப் பெயர்தான் தன்னம்பிக்கை.

'இனிமேல் மக்கள் படிக்க மாட்டார்கள்' என்று சொன்னபோது அதை ஏற்றுச் சுருங்கிப் போகாமல் இருந்த ஜே.கே. ரௌலிங் வாழ்க்கை பற்றிப் படித்ததும், ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் ஆரம்பகாலச் சோதனைகள் நினைவுக்கு வந்து போயின. 'இனிமேல் யார் வேட்டி கட்டப்போகிறார்கள்?' எனும் கேள்வியை எதிர்கொண்டபோது எனக்கு, 'ஏன் கட்ட மாட்டார்கள்?' என்றே தோன்றியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கும் ஒரு பாரம்பரிய உடையை மக்கள் உடுத்த மாட்டார்கள் என்கிற அவநம்பிக்கை, எனக்குப் பயம் தருவதற்குப் பதிலாக சவாலாக மாறியது. 'காலம் மாறிவிட்டது. வேட்டி நவநாகரிகத்தின் அடையாளம் இல்லை' என்று சொன்னது முற்றிலும் உண்மை.

என் பெற்றோர் வாழ்ந்த காலச்சூழலில் நான் வாழவில்லை. என்னைப் போல என் பிள்ளைகளின் காலச்சூழல் இல்லை. அவர்கள் வாழ்ந்த சூழலில் இருந்து பல மாற்றங்களைப் பேரப்பிள்ளைகளின் காலச்சூழல் அடைந்திருக்கிறது. ஆனால் அம்மா, அப்பா மீது நாம் கொண்டிருக்கும் அன்பும் மரியாதையும் எப்போதும் மாறியதில்லை. அது தொடர்ந்துகொண்டே இருக்கிறது. பண்பாடும், பாரம்பரியமும் காலச்சூழலுக்கு ஏற்ற மாற்றங்களை அடையவில்லை என்றால் பின்தங்கிவிடும். 'இனிமேல் யார் வேட்டி கட்டுவார்கள்?' என்கிற கேள்வி வந்தே தீரும். எனக்கு நம்பிக்கை குறையவே இல்லை. வேட்டி கட்டியதால் நானே அவமதிக்கப்பட்டிருக்கிறேன். அவமரியாதை தருகிற உடையை யார்தான் உடுத்துவார்கள்? 'அதைப் பெருமைமிகு அடையாளமாக மாற்றிக் காட்டுவோம்' என எனக்குள்ளே நான் சபதம் எடுத்துக்கொண்டேன்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வேட்டியை விரும்பிப் பெருமையாக உடுத்த என்ன செய்ய வேண்டும் என இரவு பகலாக ஒரே சிந்தனையில் இருந்தேன். சுற்றி இருந்தவர்களோ, நான் காற்றில் சண்டை போடுவதாக நினைத்தார்கள். அக்கறையுடன் அறிவுரை கொடுத்தார்கள். ‘நிச்சயம் வெற்றி பெறுவேன்’ என்ற தன்னம்பிக்கை இருந்த காரணத்தால் எனக்கு எங்கேயும் தயக்கமோ பயமோ வரவே இல்லை. எடுத்த ஒரு முயற்சி தோல்வி அடைந்தால், அதில் இருந்த குறைகளை அலசி ஆராய்ந்து அடுத்த முயற்சியில் அதைச் சரி செய்தபோது முன்பைவிடப் பெரிய வெற்றியே கிடைத்தது.

தொழில் வளர வளர எனக்கு ஓர் உண்மை தெளிவாக விளங்கியது. மூலதனம், கல்வி, தொழில்நுட்பம் எல்லாம் தெரிந்தால்தான் தொழிலில் வெற்றி பெற முடியும் என்று நினைப்பவர்கள் இப்போதும் உண்டு. அது ஓரளவு உண்மையும்கூட! ஆனால், நான் தொழில் ஆரம்பிக்கும்போது என்னிடம் தொழில் அனுபவம் பெரிதாக இல்லை, மூலதனம் இல்லை, தொழில்நுட்பம் எதுவும் தெரியாது. வங்கியில் காசோலையை எப்படி டெபாசிட் செய்ய வேண்டும் என்று தெரியாது. அதற்கான படிவத்தை யாரோ ஒருவரின் உதவியோடுதான் நிரப்பி இருக்கிறேன். எனக்குப் பிறகு வந்த, பேன்ட் சட்டை அணிந்த நபரை வங்கி மேனேஜர் முதலில் அழைத்து மரியாதையுடன் பேசி, என்னைப் பல மணி நேரம் காத்திருக்க வைத்ததுண்டு. இவை எதுவும் என்னைச் சோர்வடையச் செய்யவில்லை. இந்த நிலையை மாற்றிக் காட்ட முடியும் என்கிற தன்னம்பிக்கை எப்போதும் எனக்குள்ளே இருந்தது. இன்றுவரை அதுதான் என்னை வழிநடத்துகிறது.

The Culturepreneur

ராம்ராஜ் காட்டன் நிறுவனம் தொடங்கியபோது, ‘வேட்டியை பிராண்ட் செய்து விற்கமுடியும்’ என்கிற நம்பிக்கை யாரிடமும் இல்லை. ‘மதிப்பிற்குரியவர்களுக்கு ராம்ராஜ் காட்டன் வேட்டிகள்’ என்று விளம்பரம் செய்து சூழலை மாற்றிய பிறகு, வேட்டியை பிராண்ட் செய்து விற்பனை செய்யும் பல நிறுவனங்கள் வந்துவிட்டன. இதுதான் ராம்ராஜ் காட்டனின் உண்மையான வெற்றி. வெற்றியாளர்கள் என்பவர்கள் வேறு யாருமல்ல. தன்னம்பிக்கை மிகுந்தவர்கள்.

எங்களின் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள், உறுதுணையாக இருக்கும் நேசத்துக்குரிய நெசவாளர்கள், பெருமைக்குரிய விற்பனையாளர்கள், எங்களுடன் இணைந்து பணியாற்றும் அன்பான அலுவலர்கள், பாசத்துக்குரிய பணியாளர்கள், ‘வெண்மை’ வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். நம் உள்ளங்களில் நம்பிக்கையின் தீபம் ஒளிரட்டும். இல்லங்களில் மகிழ்ச்சி நிலைக்கட்டும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

கே.ஆர்.நாகராஜன்

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

எதில் கிடைக்கிறது தன்னம்பிக்கை?

தன்னம்பிக்கை என்பது என்ன? ‘நாம் எப்போதும், எதையும் சரியாகவே செய்வோம்’ என்ற நினைப்பா? ‘எவரிடமும் சாமர்த்தியமாகப் பேசி நாம் நினைப்பதைச் சாதித்துக்கொள்ள முடியும்’ என்ற உறுதியா? ‘எப்படிப்பட்ட சூழலையும் என்னால் எதிர்கொள்ள முடியும்’ என்ற தீர்மானமா?

தன்னம்பிக்கை என்பது பழக்கத்தால் வருவது. சுய ஒழுக்கமும், கட்டுப்பாடும், ஏராளமான அனுபவங்களும், எதிர்கொள்ளும் தோல்விகளும், செழுமையான அறிவும் அதைச் செதுக்குகின்றன. ஏதோ மந்திரம் போல அதைக் காற்றிலிருந்து வரவழைக்க முடியாது. தன்னம்பிக்கை மிகுந்த மனிதர்கள் சில தவறுகளை எப்போதுமே செய்வதில்லை.

அவை...

- மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. அதற்காக அடுத்தவர்களின் அறிவுரைகளையோ, அக்கறையோடு சொல்லப்படும் ஆலோசனைகளையோ காதில் வாங்க மாட்டார்கள் என அர்த்தம் இல்லை. உருப்படியான ஆலோசனைகளை ஏற்கிறார்கள். உள் நோக்கத்துடன் சொல்லப்படும் மோசமான விமர்சனங்களை அவர்கள் அலட்சியம் செய்கிறார்கள்.

- மற்றவர்களோடு தங்களை அவர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. ‘இதைச் செய்தால் இவர்கள் இப்படி நினைப்பார்களோ’ எனத் தயக்கம் கொள்வதில்லை. அடுத்தவர்களின் கருத்துகளுக்காக அவர்கள் வாழ்வதில்லை. தங்கள் மனம் உறுதியாக நம்புவதைச் செய்கிறார்கள். அதில் வெற்றியும் அடைகிறார்கள்.

- அவர்கள் பெருமை, திருப்தி, மகிழ்ச்சி என எதையும் வெளியில் தேடுவதில்லை. தங்களுக்கு உள்ளே இருந்து உருவாக்கிக் கொள்கிறார்கள். எந்த ஒரு செயலிலும் தங்கள் திறமையையும் அர்ப்பணிப்பையும் நூறு சதவிகிதம் செலுத்துகிறார்கள். அதற்காக ‘நான் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா?’ என்றெல்லாம் அவர்கள் கர்வத்தோடு தங்களை வெளிப்படுத்துவதில்லை.

- ‘எப்போதுமே நான் செய்வதுதான் சரி’ என அவர்கள் நினைப்பதில்லை. ஈகோ எப்போதுமே அதீத நம்பிக்கையைக் கொடுத்துத் தவறு செய்ய வைக்கும். ஒரு தவறின் விளைவு, சீட்டுக்கட்டுக் கோபுரம் போல மொத்த செயலையும் ஒன்றுமில்லாமல் சரித்துவிடும். ‘நமக்கு இதைப் பற்றி எதுவும் தெரியாது’ எனத் தெளிந்த நீரோடை போன்ற மனநிலையோடு அவர்கள் ஒவ்வொன்றையும் கற்றுக்கொள்கிறார்கள். விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் முறையாகக் கல்லூரியில் படித்தவர்கள் கிடையாது. விமானம் பற்றிய தியரிகள், ஃபார்முலாக்கள் எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. ‘நம்மிடம் இதற்கு விடைகள் இல்லை’ என்ற தெளிந்த மனதுடன் அவர்கள் அடுத்தடுத்து முயற்சிகள் செய்தார்கள். பல தவறுகளுக்குப் பிறகு ஒரு சரியான வழி கிடைத்தது.

- கேட்பதைவிட அதிகமாக அவர்கள் பேசுவதில்லை. கற்றுக்கொள்வதற்கு மிகச் சிறந்த வழி, அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்பதுதான் என்பதை

அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு உரையாடலையும் கற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பாக நினைக்கிறார்கள். எதிராளியைப் பேசவிடாமல் செய்து, தான் மட்டுமே பேசிக்கொண்டிருக்கும் தவறை அவர்கள் செய்வதில்லை.

● ‘என்னால் தனியாக எதையும் சாதிக்க முடியும்’ என அவர்கள் நம்புவதில்லை. எப்போதும், எவரிடமும் உதவி கேட்க அவர்கள் தயங்கியதில்லை. மற்றவர்களின் உதவி கேட்டு, அவர்களையும் இணைத்துக்கொண்டு செய்யும்போது எந்தச் செயலிலும் தவறுகள் நேரும் வாய்ப்புக் குறைவு. வெற்றியின் ரகசியம் என்பது, நமக்கு ஆதரவாகத் தோள்கொடுக்கும் மனிதர்கள் எப்போதும் அருகில் இருப்பதுதான்! நமக்கு எந்த விஷயங்களில் அனுபவமும் அறிதலும் குறைவாக இருக்கிறதோ, அதில் நிபுணர்களைப் பக்கத்தில் வைத்துக்கொள்வது சாதிக்க உதவும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

● ஒருவரால் எப்போதும் வெற்றி பெற்றுக்கொண்டே இருக்க முடியாது. தோல்விகளைச் சந்திக்கும்போது தன்னம்பிக்கை மனிதர்கள் துவண்டு போவதில்லை. தங்கள் திறமையின் மீது நம்பிக்கை இருப்பதால், அவர்கள் எந்த மோசமான சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் பக்குவம் பெறுகிறார்கள். காயப்படுத்தும் அளவுக்கு விமர்சனங்கள் எழுந்தாலும், அதைத் தங்கள் மனதுக்குக் கொண்டு போவதில்லை. தாங்கள் செய்த தவறுகளால் இந்தத் தோல்வி நேர்ந்தது என்றால், அதைத் தயங்காமல் ஒப்புக்கொள்கிறார்கள். வெற்றியைப் போலவே, அதை அடையும் பாதையில் பயணிப்பதும், அங்கு கிடைக்கும் தோல்விகளும் முக்கியமானவை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

● ‘இதைச் செய்தால் இது கிடைக்கும்’ என்பது போன்ற எதிர்பார்ப்புகளை அவர்கள் வைத்துக்கொள்வதில்லை. யாராலும் எதிர்காலத்தைக் கணிக்க முடியாது. இது இப்படித்தான் நிகழ வேண்டும் என எல்லாம் வரிசைப்படி நடைபெற, வாழ்க்கை என்பது பள்ளிக்கூட டைம் டேபிள் கிடையாது. அதனால் அவர்கள் எப்போதுமே, எதிர்பாராத விளைவுகளை எதிர்கொள்ளத் தயங்குவதில்லை. எவ்வளவு மோசமான சூழ்நிலையிலும், நம்பிக்கை தரும் ஏதோ ஒன்று இருப்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

● தன்னம்பிக்கை மனிதர்கள், அடுத்தவர்களுக்கு உதவி செய்யத் தயங்குவதில்லை. இப்படி நிறைய உதவி செய்யச் செய்ய, இன்னும் பலர் அனுபவமும் ஆலோசனையும் தேடி வருவார்கள். இதுவே ஒருவரை நிபுணத்துவம் பெற வைக்கிறது; வெற்றிகரமான மனிதராகவும் மாற்றுகிறது. பெஞ்சமின் ஃபிராங்க்ளின் ஒவ்வொரு நாளும் தன்னைக் கேட்டுக்கொள்வார், ‘இந்த நாளில் நான் என்ன நல்ல விஷயங்களைச் செய்யப் போகிறேன்’ என்று! இப்படிப் பலருக்கும் உதவி செய்யும்போது, நம்மைச் சுற்றி நம்பிக்கை பெற்ற மனிதர்களாகவே இருப்பார்கள். அதுவே ஒருவரின் தன்னம்பிக்கையை வளர்த்தெடுக்கும்.

● நூற்றுக்கணக்கான நண்பர்கள் தேவையில்லை; ஊரில் எல்லோரையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. மிக நெருக்கமான, அக்கறையான, உண்மையான வெகுசில நண்பர்கள் மற்றும் உறவுகளின் ஆதரவு எப்போதும் இருப்பது அவசியம். இப்படிப்பட்டவர்களை அடிக்கடிச் சந்திப்பதும், அவர்களோடு உங்களின் கனவுகளை, ஐடியாக்களைப் பகிர்ந்துகொள்வதும் தன்னம்பிக்கையை உயர்த்தும். ●

RAMRAJ காட்டன்

வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 10 இதழ் 4

அக்டோபர் 2025

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

கே.ஆர்.நாகராஜன்

ஆசிரியர்

த.செ.ஞானவேல்

இதழாசிரியர்

வள்ளி

வடிவமைப்பு

K. உதயா

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
A2, தரை தளம்,
எண்.110, டிரினிடி காம்ப்ளக்ஸ்,
நான்காவது அவென்யூ,
அசோக் நகர், சென்னை - 600 083.
கைப்பேசி: 9952920801
email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

மகிழ்ச்சி தரும் 10 விதிகள்!

- வாழ்வின் மிக முக்கியமான முடிவுகளைத் துணிச்சலுடன் எடுங்கள். கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, செய்யாமல் தவிர்த்த செயல்களை நினைத்தே பலரும் வேதனைப்படுகிறார்கள். அந்த வேதனை உங்களுக்கு இருக்கக்கூடாது.
- மனிதர்களைக் கையாளும் திறமையே எவருக்கும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் தருகிறது. எல்லோரையும் பக்குவத்துடன் அணுகுங்கள்.
- மற்றவர்களிடம் பொய் சொன்னாலும், உங்களுக்கு உண்மையாக இருங்கள். மனம் நேர்மறையாகச் சிந்திக்கும்.
- உங்கள் உடல்நலனில் அக்கறை காட்டுங்கள். மகிழ்ச்சி தரும் மதிப்புக்குரிய சொத்து அதுதான். அந்தச் சொத்தின் மீதே உங்களின் சாம்ராஜ்ஜியம் எழுப்பப்படுகிறது.
- ‘பணம் மட்டுமே சந்தோஷம் தராது’ என யார் சொன்னாலும் நம்பாதீர்கள். பணத்தைச் சேமியுங்கள், கவனமாக முதலீடு செய்து பெருக்குங்கள். வாழ்வின் முக்கால்வாசிப் பிரச்னைகளைப் பணம் தீர்த்துவிடும்.
- வாழ்க்கைத்துணையைக் கவனமாகத் தேர்வு செய்யுங்கள். வாழ்வின் பெருமகிழ்ச்சியை அவரே உத்தரவாதம் செய்கிறார்.
- உங்களுக்கு மகிழ்ச்சி தரும் நண்பர்கள், உறவினர்களுடன் அதிக நேரம் செலவிடுங்கள். அந்த உற்சாகமே உங்களைத் தன்னம்பிக்கையுடன் உழைக்க வைக்கும்.
- தெளிந்த நீரோடை போல வாழ்க்கை எப்போதும் சீராகச் செல்லாது. சில நேரங்களில் காட்டாறு போல அது கட்டற்றுப் பாயும். சூழ்நிலைகளை அனுசரித்துச் செல்லுங்கள்.
- எந்த இடத்திலும் தேங்கி நிற்காதீர்கள். முன்னேறிச் செல்பவர்களுக்கே மகிழ்ச்சியின் கதவுகள் திறக்கும்.
- ‘எல்லாம் தெரியும்’ என நினைக்காதீர்கள். கற்றுக்கொண்டே இருங்கள்! கற்றுக்கொள்ளும் மனநிலை இருந்தால், உங்களால் எதையும் பெற முடியும்.

தேவையற்றதை நீக்குங்கள்!

கடைவீதிக்குச் சென்ற ஒரு சிற்பி, ஒரு கடையருகே பெரிய பாறாங்கல் ஒன்றைப் பார்த்தார். அந்தக் கடைக்காரரிடம் சென்று, “ஐயா, இந்தப் பாறாங்கல் உங்களுக்குத் தேவையா? அல்லது நான் எடுத்துக்கொள்ளலாமா?” என்று கேட்டார்.

“தாராளமாய் எடுத்துச் செல்லுங்கள். இந்தக் கல் என் கடைக்குப் பெரிய இடையூறாக இருக்கிறது. கடைக்கு வருபவர்கள் இதில் இடித்துக்கொண்டு தடுமாறி விழுகின்றனர்” என்றார் கடைக்காரர்.

ஒரு வண்டியில் அதை ஏற்றித் தன் சிற்பக்கூடத்துக்கு எடுத்துச் சென்ற அந்தச் சிற்பி, அதை அழகாகச் செதுக்கி அற்புதமான கடவுள் சிலை ஒன்றை உருவாக்கினார். அந்தச் சிலையை விற்பனை செய்ய அதே கடைவீதிக்கு வந்தார். பலரும் போட்டி போட்டுக்கொண்டு விலைக்குக் கேட்டனர்.

பாறாங்கல் எந்தக் கடையின் வாசல் அருகே இருந்ததோ, அந்தக் கடைக்காரரே அதிக விலை கொடுத்துச் சிலையை வாங்கினார். பிறகு, “இந்த அற்புதமான சிலையை எந்த மலையிலிருந்து கல் எடுத்துச் செதுக்கினீர்கள்?” என்று சிற்பியிடம் கேட்டார்.

அதற்குச் சிற்பி, “வேறு எங்கும் இல்லை. தங்கள் கடை வாசலில்தான் கிடைத்தது. என்னை நினைவில்லையா? ஆறு மாதங்களுக்கு முன் இடையூறாய்க் கிடக்கிறது என்று சொல்லி என்னிடம் நீங்கள் கொடுத்த கல்தான் இது. தங்கள் பார்வையில் இது தடைக்கல்லாகத் தெரிந்தது. எனக்கு இதற்குள் கடவுள் தெரிந்தார். இதில் வேண்டாத பகுதிகளை மட்டும் செதுக்கி அகற்றினேன். உள்ளே இருந்த கடவுளின் உருவம் வெளிப்பட்டது” என்றார். கடைக்காரர் வியந்தார்.

தேவையற்ற வார்த்தைகளை, அவநம்பிக்கைகளை வாழ்வில் இருந்து நீக்கினால், நாமும் தன்னம்பிக்கை கொண்ட மனிதராக வாழ்வில் முன்னேறலாம்.

எண்ணம் போல் வாழ்க்கை!

- நான் ஆரோக்கியமாக இருக்கிறேன்.
- என் மனம் நிம்மதியாக இருக்கிறது.
- நானும் எனது குடும்பமும் நிம்மதியாக இருக்கிறோம்.
- என் சிந்தனை தெளிவாக இருக்கிறது.
- நான் நல்ல பெயருடன் வாழ்கிறேன்.
- நான் இனிமையாகப் பழகுபவன்.
- எல்லோரிடமும் உண்மையாக நடப்பவன்.
- நான் ஒரு வெற்றி நட்சத்திரம்.
- நான் சந்தோஷமாக வாழ்கிறேன்.
- நான் நம்பிக்கை வாய்ந்தவன்.
- நான் எப்போதும் விழிப்புடன் இருக்கிறேன்.
- நான் கருணை நிரம்பியவன்.
- நான் அன்பு உள்ளம் கொண்டவன்.
- நான் ஒரு புனித ஆத்மா.
- நான் இவையெல்லாம் நிரம்பி, தெய்வீக சக்தி வாய்ந்த உலகம் போற்றும் அற்புத மாமனிதன்.

இதை மனப்பாடம் செய்து மனதில் பதித்துக்கொள்ளுங்கள். தினமும் அதிகாலை விழித்தவுடன் கண்களைத் திறக்கும் முன்பும், இரவு தூங்குவதற்கு முன்பும் மனதார இந்த வார்த்தைகளை உச்சரிக்கவும். நாம் எதை நம்புகிறோமோ, அதுவாகவே ஆகிறோம். இதையெல்லாம் நம்பினால், இனி உங்கள் வாழ்வில் வெற்றியே!

வார்த்தை விளையாட்டு!

- மிகவும் சுயநலமான இரண்டெழுத்து வார்த்தை, 'நான்'. இயன்றவரை இதைத் தவிர்த்துவிடுங்கள்.
- நிறைவு தரும் இரண்டெழுத்து வார்த்தை, 'நாம்'. அடிக்கடி இதைப் பயன்படுத்துங்கள்.
- மிகவும் ஆபத்தான மூன்றெழுத்து வார்த்தை, 'கோபம்'. அதைக் குறைத்துக்கொள்ளுங்கள்.
- மிகவும் இனிமையான மூன்றெழுத்து வார்த்தை, 'அன்பு'. அதை எப்போதும் வெளிப்படுத்துங்கள்.
- வேகமாகப் பரவும் நான்கெழுத்து வார்த்தை, 'வதந்தி'. இதை எப்போதும் பேசாதீர்கள்.
- எல்லோரையும் கவரும் நான்கெழுத்து வார்த்தை, 'புன்னகை'. இதை ஆபரணமாக முகத்தில் அணியுங்கள்.
- உங்களையே வீழ்த்திவிடும் மூன்றெழுத்து வார்த்தை, 'பொறாமை'. எப்போதும் இது வேண்டாம்.
- கடின உழைப்பால் கிடைக்கும் மூன்றெழுத்து வார்த்தை, 'வெற்றி'. இதை அடைய ஆசைப்படுங்கள்.
- மிகவும் வலிமையான மூன்றெழுத்து வார்த்தை, 'அறிவு'. இதைத் தேடித் தேடிப் பெறுங்கள்.
- வாழ்வைச் சொர்க்கமாக்கும் மூன்றெழுத்து வார்த்தை, 'நட்பு'. இதைப் போற்ற மறக்காதீர்கள்.



தன்னம்பிக்கை மனிதராக மாறுங்கள்!

சில மனிதர்களைப் பார்க்கும்போதே நாம் ஈர்க்கப்படுகிறோம். காரணம், அவர்கள் எல்லோரையும் கவரும்விதமாக இருக்கிறார்கள், அவர்களின் பண்புகள் மதிக்கப்படுகின்றன, அவர்களின் தோற்றம் நேர்த்தியாக இருக்கிறது, அவர்கள் நாகரிகமாக நடந்துகொள்ளத் தெரிந்து வைத்திருக்கிறார்கள், சமூகத்திலும் அவர்களுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது.

‘இந்த எல்லாமே அவர்களுக்கு எப்படி வருகிறது’ என்பதைப் பலரும் உணர்வதில்லை. வாழ்க்கையில் எல்லாவற்றிலும் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடிப்பதன் மூலமே அவர்கள் இந்த நிலையை எட்டுகிறார்கள். எல்லோரும் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது இதைத்தான்.

மதிப்பை உயர்த்தும் ஒழுங்கை இவர்களிடமிருந்து கற்றுக்கொண்டு வாழ்வில் முன்னேறுவது எப்படி?

- உடல்நலமே முக்கியம் என்பதை உணர்ந்து உடற்பயிற்சி செய்து, ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிட்டு அவர்கள் உடலைப் பராமரிக்கிறார்கள். உடலுக்குக் கெடுதல் விளைவிக்கும் எதையும் அவர்கள் செய்வதில்லை.
- பணத்தை உருப்படியாகச் செலவழிப்பது எப்படி என்று அறிந்து, எப்போதும் சரியான முடிவுகளையே எடுக்கிறார்கள். தங்களிடம் பணம் சேரும்போது அவர்கள் நிறம் மாறுவதில்லை.
- சூழ்நிலை எவ்வளவு மோசமாக மாறினாலும், ‘இப்போது எதைச் செய்வது சரி’ என்பதை அவர்கள் கச்சிதமாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மனதளவில் நொறுங்கிப் போய் அவர்கள் சோர்ந்து வீழ்வதில்லை.
- நேற்றைய சாதனைகளில் திருப்தி அடைந்துவிடாமல், இன்று அதைவிட அதிகமாக உழைக்க வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். உழைப்பதற்கு அவர்கள் தயங்குவதில்லை.
- செய்வது சின்ன வேலையா, பெரிய கடமையா என்று அவர்கள் வித்தியாசம் பார்ப்பதில்லை. எதைச் செய்தாலும், அதில் நூறு சதவிகித உழைப்பைக் கொடுக்கிறார்கள்.
- சில சந்தர்ப்பங்களில் தவறான முடிவுகளை எடுக்குமாறு ஆசைகள் தூண்டில் போடும். அவர்கள் சாமர்த்தியமாக அதில் சிக்காமல் தவிர்த்துவிடுகிறார்கள்.
- அவர்கள் தங்கள் பலவீனங்களை முழுமையாக உணர்ந்திருக்கிறார்கள். அந்தப் பலவீனங்கள் தங்கள் வாழ்க்கையைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்கிறார்கள். அவற்றைச் சரிசெய்யும் வழிகளை எப்போதும் தேடுகிறார்கள்.
- வசிக்கும் வீடு, வைத்திருக்கும் வாகனம், அணிந்திருக்கும் ஆடை, கையிலிருக்கும் பணம் ஆகியவற்றை மட்டுமே வைத்து ஒருவருக்கு மதிப்புக் கிடைப்பதில்லை என்பது அவர்களுக்குப் புரிந்திருக்கிறது.
- வசதியாக இருப்பதால் ஒழுங்கு வருவதில்லை. வாழ்வில் ஒழுங்கைக் கடைப்பிடித்தால் வசதி வரும் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. ●

தீபாவளி வழிபாடுகள்!

❖ ஐப்பசி மாதத்தில் தீபாவளியை ஏன் கொண்டாடுகிறோம்? இரண்டு பேருக்கு இடையே ஏற்படும் பிரச்னைக்குத் தீர்ப்பளிக்கும் நீதிபதி, தராசு போல நடுநிலையாளராக இருக்க வேண்டும். தராசைத் 'துலாக்கோல்' என்றும் சொல்வதுண்டு. தீபாவளி கொண்டாடப்படும் ஐப்பசி மாதத்துக்கும் 'துலா மாதம்' என்று பெயர் உண்டு. தீபாவளி நன்னாள் நீதியை எடுத்துச் சொல்கிறது. அநியாயம் செய்த நரகாசுரனை, தாங்கள் பெற்ற மகன் என்றும் பாராமல், கிருஷ்ணரும் பூமாதேவியின் அவதாரமான சத்தியபாமாவும் இணைந்து அழித்தனர். 'நீதி நிலைக்க வேண்டும்' என்பதே தீபாவளித் திருநாள் கொண்டாடுவதன் நோக்கம்.

❖ நரகாசுரன், தன் தாயைத் தவிர வேறு யாராலும் அழிவு வரக் கூடாது என்ற வரம் பெற்றிருந்தான். பூமாதேவி அப்போது சத்தியபாமாவாகப் பிறந்து கிருஷ்ணரைத் திருமணம் செய்திருந்தார். அவரே தன் மகனை அழித்தார். பெருமாளிடம், தன் மகன் இறந்த நாளைத் 'தீபாவளி' என்று கொண்டாடுவதற்கு அனுமதி கேட்டார். 'அன்று தலைக்குத் தேய்க்கும் எண்ணெயில் லட்சுமியும், குளிக்கும் வெந்நீரில் கங்கையும் வாசம் செய்யவேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டார். அதனால் இந்த நீராடல் 'கங்கா ஸ்நானம்' என்றானது.

❖ ராம பிரான் ராவணனுடன் போரிட்டு ஜெயித்த நாளே தீபாவளி என்றும் கூறப்படுகிறது. ஆகவே, அதர்மம் அழிக்கப்பட்டுத் தர்மம் நிலை நாட்டப்பட்ட வெற்றித் திருநாளாகவே தீபாவளி விளங்குகிறது.

❖ செல்வத்தின் அதிபதி குபேரலட்சுமி. தீபாவளியன்றோ, அதற்கு முந்தின நாளோ குபேரலட்சுமியை வழிபட்டால் லட்சுமி கடாட்சம் உண்டாகும். வடமாநிலங்களில் வியாபாரிகள் தீபாவளி தினத்தில் லட்சுமி பூஜை செய்வர். தீபாவளியில் மட்டுமின்றி, வெள்ளிக்கிழமை காலை அல்லது மாலை சுக்கிர ஓரை நேரம் மற்றும் திரிதியை திதிகளில் குபேரலட்சுமியைப் பூஜிப்பது மிகுந்த நன்மை தரும்.

❖ செல்வம் பெருக்கும் லட்சுமி குபேர பூஜையும் தீபாவளியின் ஸ்பெஷல் அடையாளம். பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் விரதம் இருந்து லட்சுமி குபேர பூஜை செய்யலாம். தீபாவளி அன்று அதிகாலையில் கங்கா ஸ்நானம் செய்த பிறகு, பூஜையறையில் லட்சுமி குபேரர் படம் மற்றும் குபேர யந்திரத்தைக் கிழக்கு அல்லது மேற்குத் திசை பார்த்தபடி வைத்து, இந்தப் பூஜையைச் செய்ய வேண்டும். லட்சுமி குபேர பூஜை செய்வதால், கடன் பிரச்னைகளில் இருந்து விடுபடலாம். நம் இல்லத்தில் செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை.

❖ நம் இல்லங்களில் வளமும் நிறைவும் பெருக, தீபாவளி அன்று அன்னபூரணியை மனதார வழிபட வேண்டும்.

❖ ஈசனை அடைய பார்வதி தேவி கடைப்பிடித்த விரதம், கேதார கௌரி விரதம். இந்த விரதத்தால் மகிழ்ந்த ஈசன், தேவிக்குத் தனது திருமேனியில் இடப்பாகத்தைத் தந்து அர்த்தநாரீஸ்வரராக அருள்பாலித்தார். தீபாவளி அன்று இந்த விரத பூஜையைச் சுமங்கலிகள் அனுஷ்டிக்கலாம். பிரிந்த தம்பதி ஒன்றுசேர, தாம்பத்தியம் சிறக்க, மாங்கல்ய பலம் பெருக, நினைத்தது நினைத்தபடி நிறைவேற வரம் அருளும் வல்லமை இந்த விரதத்துக்கு உண்டு. ●

தன் மீது நம்பிக்கை வைப்பவர்கள்தான் திறமையாக உயர்ந்து மகத்தான செயல்களைச் செய்ய முடியும். அப்படிப்பட்ட உயரத்துக்குச் செல்ல சில வழிகள் உண்டு. அவை:

தன்னம்பிக்கையைச் செதுக்குங்கள்!



பலவீனங்களை உணருங்கள்: உங்கள் பலவீனம் எது, உங்களிடம் நீங்கள் நினைத்து நினைத்து வெட்கப்படும் குணம் எது என்பதை அறியுங்கள். முகப்பரு, எவ்வளவு அழுத்தி வாரினாலும் படியாத தலைமுடி, கூட்டமாக மனிதர்களைப் பார்த்தால் கூச்சப்பட்டுத் தலைகவிழ்ந்து கொள்வது என ஏதாவது ஒரு விஷயம் உங்களைத் தன்னம்பிக்கை இல்லாதவராக ஆக்கியிருக்கும். உங்கள் தாழ்வு மனப்பான்மைக்கு எது காரணமோ, அதை அகற்றுவதற்கு வழி தேடுங்கள். தன்னம்பிக்கை பிறக்கும்.

நேசிப்பவர்களிடம் பகிருங்கள்: உங்கள் பிரச்னையின் ஆணிவேர் என்ன என்பது குறித்து உங்களை நேசிப்பவர்களிடம் பேசுங்கள். சில பிரச்னைகளை உங்களால் தீர்த்துக்கொள்ள முடியும். உதாரணமாக, உங்கள் பிரச்னை முகப்பரு என்றால், சிகிச்சை மூலம் அதைச் சரி செய்ய முடியும். தலைமுடி எப்போதும் கலைந்துவிடுவது உங்கள் தலையின் இயல்பு என்றால், அதை உங்களால் மாற்ற முடியாது. 'இதுதான் இயல்பு' என அதை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் நண்பர்கள் இந்தப் பலவீனங்களோடு சேர்த்தே உங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களும் அப்படி ஏற்றுக்கொள்ளக் கூடும். பிறகு ஏன் கவலை?

தவறுகளிலிருந்து மீண்டெழுங்கள்: யாருமே நூறு சதவிகிதம் கச்சிதமானவர்கள் கிடையாது என்பது ஞாபகம் இருக்கட்டும். அபார தன்னம்பிக்கையாளர்களிடம்கூடச் சில பலவீனங்கள் கண்டிப்பாக இருக்கும். அவர்கள் வெளியில் காட்ட மாட்டார்கள்; அவ்வளவுதான்! வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நம்மிடமும் பலவீனங்கள் பல உருவாகும். இது இயல்பே. எல்லாச் சாலைகளும் மேடு, பள்ளங்கள் கொண்டவையே! தவறான மனநிலையிலிருந்து மீண்டெழுங்கள்.

பலத்தைக் கண்டறியுங்கள்: மிக மோசமான மனிதருக்குள்ளும் ஏதாவது ஒரு திறமை ஒளிந்திருக்கும். உங்களின் தனித் திறமை எது, பலம் என்ன என்பதைக் கண்டறியுங்கள். அதில் கவனம் செலுத்தி மேன்மை அடையுங்கள். தாழ்வு மனப்பான்மை உங்களைத் தழுவும்போது, நீங்கள் ஒரு நோயாளி போல ஆகி விடுகிறீர்கள். அந்த நினைப்பே உங்களை முடக்கி மூலையில் தள்ளிவிடும். அந்த நேரத்தில் ஏதாவது பொழுதுபோக்கில் கவனத்தைத் திருப்பி, உங்களை உற்சாகமாக வைத்துக்கொள்ளுங்கள். இது உங்கள் மனநிலையை மாற்றும்.

நிறைவு அடையுங்கள்: பேராசை என்ற பேய்க்கு எல்லையே கிடையாது. 'பேராசை பிடித்த ஒற்றை மனிதனுக்கு, இந்த ஒட்டுமொத்த உலகமே

போதாது' என்பார்கள். 'நம்மிடம் கார் இல்லை', 'பக்கத்து வீட்டைவிட நம் வீடு சிறியது' என்பது போன்ற நினைப்புகளும், அடுத்தவர்களுடனான ஒப்பீடுகளும், மேலும் மேலும் தாழ்வு மனப்பான்மையை வளர்க்கவே செய்யும். நிறைவற்ற, திருப்தி இல்லாத மனநிலையைத் துரத்துங்கள். உங்களிடம் இருக்கும் விஷயங்களை நினைத்து நிறைவு அடையுங்கள். இதனால் கிடைக்கும் மன அமைதி, உங்களுக்குள் மாயாஜாலம் நிகழ்த்தும்.

பாசிட்டிவ்வாக பேசுங்கள்: 'இந்த உலகிலேயே நாம்தான் பரிதாபத்துக்குரிய ஜீவன்', நமக்கு நேர்ந்தது போல யாரும் கஷ்டப்படக் கூடாது' என உங்களைப் பற்றி நீங்களே கழிவிரக்கம் கொள்ளாதீர்கள். மற்றவர்களும் உங்கள் மீது பரிதாபமோ, அனுதாபமோ காட்ட அனுமதிக்காதீர்கள். உங்களைப் பற்றி, உங்கள் வளர்ச்சி பற்றி, உங்கள் எதிர்காலம் பற்றி, எப்போதும் பாசிட்டிவ்வாகப் பேசுங்கள். உங்கள் பலத்தையும் பண்புகளையும் பிறரிடம் வெளிப்படுத்தத் தயங்காதீர்கள். இப்படிச் செய்யும்போது உங்கள் மனமும் உங்களை நம்பிக்கை முனை நோக்கி நகர்த்துகிறது.

மனதால் வாங்குங்கள்: உங்களை யாராவது பாராட்டும்போதோ, நன்றி சொல்லும்போதோ, அதை வெறுமனே காதுகளால் வாங்கி, அங்கேயே கழற்றி எறிந்து விடாதீர்கள். உங்கள் மனதால் அதை முழுமையாக வாங்குங்கள். மனதுக்கு அது மிகவும் தேவைப்படுகிறது.

புன்னகை அணியுங்கள்: உங்கள் முகத்தில் வெளிப்படுத்தும் உணர்வுகளே, உங்கள் மூளையின் சில ஏரியாக்களைத் தூண்டிவிட்டு மனநிலையைக் கட்டுப்படுத்துகின்றன என ஆய்வுகள் சொல்கின்றன. தினமும் கண்ணாடி முன் சில நிமிடங்களாவது நின்று சிரியுங்கள்; உங்கள் புன்னகை முகத்தைப் பார்த்து உற்சாகம் அடையுங்கள். காலப்போக்கில் இது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும்.

நம்பிக்கையாக நடியுங்கள்: உண்மையில் உங்களுக்குத் தன்னம்பிக்கைக் குறைவாக இருந்தாலும், அபார தன்னம்பிக்கை கொண்ட மனிதராக இந்தச் சமூகத்தின் முன் நடியுங்கள். தோள்களை உயர்த்தி நடப்பது, நேர்கொண்ட பார்வையால் மற்றவர்களை அணுகுவது, கால் மீது கால் போட்டுக் கம்பீரமாக அமர்வது என உங்கள் செய்கைகள் உங்களை முழுமையான மனிதராகக் காட்டட்டும். அதன்பின் உங்கள் மனநிலை ஸ்விட்ச் போட்டது போல பாசிட்டிவ்வாக மாறும்.

கொள்கைவாதியாக இருங்கள்: உங்களுக்கு என்று சில கொள்கைகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். 'எதையும் தள்ளிப் போடுவதில்லை' எனத் தீர்மானித்தால், நூறு சதவிகிதம் அந்தத் தீர்மானத்துக்கு உண்மையாக இருங்கள். இப்படிப்பட்ட கொள்கைகள் நம்மைப் போன்ற மனிதர்கள் உருவாக்கியவைதான். உலகின் எல்லா மூலைகளிலும் இவற்றை இறுக்கமாகப் பின்பற்றுபவர்கள் உண்டு. யாரோ பலரால் செய்ய முடியும் என்றால், 'நம்மாலும் முடியும்' என நம்புங்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நெறி தவறினால், 'எதற்கும் வளைந்து விடும் அவநம்பிக்கை ஆசாமி' என்ற முத்திரை உங்கள் மீது விழும். அது உங்கள் முன்னேற்றத்துக்கு ஆபத்தானது.

அன்பு காட்டுங்கள்: உங்களைச் சுற்றி இருப்பவர்களிடம் அன்பு காட்டுங்கள். சிக்னலில் காத்திருக்கும் பார்வையற்றவர் சாலையைக் கடக்க உதவுவது, உங்களுக்கு காபி கொடுக்கும் பணியாளருக்கு நன்றி சொல்வது எனச் சின்னச்சின்ன விஷயங்கள்கூட அன்பின் வெளிப்பாடுதான். நீங்கள் வெளிப்படுத்தும் அன்பு, அவர்கள் வாழ்வில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்துகிறது. 'எங்கெங்கும் நேர்மறை எண்ணங்கள் பரவக் காரணமாக இருக்கிறோம்' என்ற நினைப்பே உங்களது தன்னம்பிக்கை ஸ்கேலை உயர்த்திவிடும்.

துல்லியத்துக்கு ஆசைப்படாதீர்கள்: மனிதர்கள் எல்லோருமே தவறு செய்யக் கூடியவர்கள். எனவே, நூறு சதவிகிதத் துல்லியத்தை உங்களிடமோ, சுற்றி இருப்பவர்களிடமோ எதிர்பார்க்காதீர்கள். நிறைய நிறைகளும், கொஞ்சமே கொஞ்சம் குறைகளும் நிறைந்ததாகத்தான் எல்லாம் இருக்கும். துல்லியத்தைத் தேடினால், 'நம்மால் இது முடியாதோ' என்ற நினைப்பு தோன்றும். அது உங்கள் லட்சியத்தை முடக்கிவிடும்! ●

மனதுக்குள் என்ன நினைக்கிறோமோ அதைத்தான் வெளிப்படுத்துகிறோம். மனதுக்குள் ஒன்றை நினைத்து வெளியே இன்னொன்றை வெளிப்படுத்தும் வித்தையை யாராலும் வெகுநாள் செய்துகொண்டே இருக்க முடியாது. என்றாவது ஒருநாள் அது வெளியில் வந்துவிடும். ஆழ்மனதளவில் ஒருவர் உயர்வாக இருந்தால்தான், அவர் வெளியிலும் உயர் பண்பை வெளிப்படுத்த முடியும். அதன்மூலம் தன்னம்பிக்கை பெற்று, வாழ்வில் உயர முடியும். ஆழ்மனதளவில் எப்படி உயர்வாக உணர்வது? அதற்கான ஐந்து வழிகள் என்ன?

உயர்வாய் உணர ஐந்து வழிகள்!

1. பிறருக்குக் கொடுங்கள்: தொலைக்காட்சியில் ஒரு சமையல் கலைஞர் சமைப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் இருபது பேருக்குச் சுவையான காய்கறி சாதம் சமைக்கிறார். சமைத்து ஒரு தட்டில் கொஞ்சம் போட்டுச் சாப்பிட்டுப் பார்த்து, 'ருசி அருமையாக இருக்கிறது' என்று சொல்கிறார். நாம் அனைவரும் அதை ரசிப்போம். அதே சமயம், அந்த காய்கறி சாதத்தைப் பசித்த வயிறுடைய ஏழைகளுக்குக் கொடுப்பதாய்க் காட்டுகிறார்கள். அப்போது நம் மனதைக் கவனித்துப் பார்த்தால், அது பூரண திருப்தியில் இருக்கும். அந்தத் திருப்தி உணர்வுதான் உயர்வாகும். பிறருக்குக் கொடுப்பது மூலம் உயர்வான மனதை எளிதாய் அடையலாம்.

'ஒருவருக்குக் கொடுப்பது உயர்வானது. கொடுப்பதை வேண்டாம் என்று நாகரிகமாக மறுப்பது இன்னும் உயர்வானது' என்கிறது ஒரு புறநானூற்றுப் பாடல். நம்மிடம் மிஞ்சி என்ன இருக்கிறதோ, அதைப் பிறருக்குக் கொடுக்கும் மனப்பக்குவம் வளர வேண்டும். அது செல்வமாக மட்டும்தான் இருக்க வேண்டும் என்றில்லை. அது கல்வியாக இருக்கலாம். உங்களுக்குத் தெரிந்த விஷயங்களைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்கலாம். பிறருக்குத் தேவையான சமயத்தில் செயல் அளவில் சின்னச் சின்ன உதவிகள் செய்யலாம். பணத்திலோ, கல்வியிலோ, உடல் தகுதியிலோ, சூழ்நிலை காரணமான பின்னடைவில் இருப்பவர்களைப் பார்க்கும்போது 'இவருக்கு நம்மால் என்ன உதவி செய்ய முடியும்' என்ற கேள்வி உங்கள் ஆழ்மனதில் தோன்றிவிட்டால், நீங்கள் உயர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

2. பிறரை மதியுங்கள்: உலகின் உயர்வான மனிதர்கள் பிறரை மதிப்பவர்களாக இருப்பார்கள். வயதையோ, பணத்தையோ, கல்வியையோ, திறமையையோ பார்த்துப் பிறரைத் தாழ்வாக எண்ணாமல் இருப்பார்கள். எப்படி இதை மனதுக்குள் வளர்த்துக் கொள்வது? எளிமையான முறை ஒன்றிருக்கிறது. 'சின்னச் சின்ன விஷயங்களில் கூடப் பிறர் நம்மை மதிக்க வேண்டும் என்று நினைக்கிறோம். அதே போலப் பிறரை நாமும் மதிக்க வேண்டும்' என்று நினைத்தால் பிறரை மதித்தல் எண்ணம் ஆழ்மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். 'எதிலும் உயர்வு, தாழ்வு இல்லை. எவரும் எவருக்கும் குறைந்தவர் இல்லை' என்று நினைத்தால் தன்னம்பிக்கையுடன் மனிதர்களையும் செயல்களையும் அணுக முடியும்.

3. பிறரை நேசியுங்கள்: அனைத்து உயிர்களையும் நேசியுங்கள். இந்த உலகின் உயிரினமாகப் பிறந்துவிட்ட அனைத்து உயிர்களுக்கும் உங்களுக்கும் உள்ள ஒற்றுமைகளைத் தனிமையில் நினைத்துப் பாருங்கள். அனைவருக்கும் பசிக்கும், அனைவருக்கும் மகிழ்ச்சி வரும், அனைவருக்கும் எல்லா உணர்வுகளும் இருக்கும். இப்படி 'அனைவரும், அனைவரும்' என்று நினைத்துக்கொண்டே இருங்கள். அந்தச் சிந்தனைக்குத் தடை போடாதீர்கள். அது அப்படியே விரிந்து செல்லட்டும். ஒரு கட்டத்தில், சக மனிதர்களையும் தாண்டி எல்லா உயிர்களையும் நேசிக்கும் மனநிலை உங்களுக்கு வாய்த்துவிடும். இந்த எண்ணம் வந்த பிறகு, யாரும் கற்றுக் கொடுக்காமல் நீங்களாகவே அனைவரிடமும் அன்பு செலுத்த ஆரம்பித்து விடுவீர்கள். உங்கள் முகத்தில் கனிவு பிறந்துவிடும்.

4. தனித்தன்மையாக இருங்கள்: மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்க கறுப்பினத்தவருக்காகப் போராடிய காலம் அது. ஒருநாள் நண்பருடன் தெருவில் பேசியபடி நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த வெள்ளை நிற வெறியர்கள் காந்தி மீது கல்லெறிய ஆரம்பித்தார்கள். அவர் தலையில் கற்கள் தாக்கி ரத்தம் கொட்டிற்று. காந்தி அதிலிருந்து தப்பிக்க ஓடுகிறார். அங்கே ரிக்ஷா இருக்கிறது. ரிக்ஷா தொழிலாளர்கள், 'காந்திஜி, வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள். நாங்கள் உங்களைக் காப்பாற்றி வண்டி ஓட்டிச் செல்கிறோம்' என்று சொல்கிறார்கள். ஆனால் காந்தி, "ஐயா, நீங்கள் இழுப்பது கை ரிக்ஷா. மனிதனை மனிதன் கையால் இழுப்பது இழிவு என்பது என் மனதில் ஆழமாகப் படிந்துவிட்டது. என் உயிரே போனாலும் என்னால் உங்கள் கை ரிக்ஷாவில் போக முடியாது" என்று மறுத்துவிட்டார். எவ்வளவுதான் நெருக்கடி வந்தாலும் உயர்வு மனநிலையில் இருந்து விலகாத தனித்தன்மைக்கு இந்தச் சம்பவத்தை எடுத்துக்காட்டாகச் சொல்லமுடியும். மனதில் உறுதியான எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். எப்போதும் தனித்தன்மையை இழக்காதீர்கள்.

5. எவரையும் எடை போடாதீர்கள்: உயர்வானவர்கள் எங்கும் எவரையும் எடை போடாமல் பழகுவார்கள். யாரைக் கண்டாலும் அன்புடன் நலம் விசாரித்து, அருகில் சென்று அமர்ந்து பேசுவார்கள். ஆனால் உயர்வு குணம் இல்லாத சராசரி மனிதர்கள், சக மனிதர்களை எடைபோட்டு அதன்படிப் பழகுவார்கள். தங்களைவிட உயர்ந்தவர்களிடம் இவர்களாகப் போய்ப் பேசுவார்கள். வசதி குறைவானவர்கள் வந்தால், முகத்தைத் திருப்பிக்கொண்டு தவிர்க்க நினைப்பார்கள். பிறரை எடைபோட்டு, 'இவர் அப்படி', 'அவர் இப்படி' என்று நினைக்காமல் இருந்தாலே ஆழ்மனதில் உயர்வு உணர்வு வந்துவிடும். எப்போதும் எவரையும் எடை போட்டுக்கொண்டு இருக்காதீர்கள்.

இப்படி அன்றாட வாழ்க்கையில் உயர்வு மனநிலையை அடைய உளவியல்பூர்வமாக என்ன செய்ய வேண்டும் என்று நாம் யோசித்தால், இந்த ஐந்து வழிகள் தெரியும். மனம் உயர்வாக மாறினாலே, செயல்களில் உயர்வு தெரியும். அதன்பின் நம் அன்றாட வாழ்க்கையே உயர்வை நோக்கிப் போக ஆரம்பித்துவிடும்.

உயர்வை நோக்கி நகர்வோம், தன்னம்பிக்கை பெற்று நம் வாழ்வை உயர்த்துவோம். ●

கடவுளைக் காணலாம்!

'நீங்கள் நேசிக்கும் ஒருவரின் உருவத்தை வரையுங்கள்' எனக் குழந்தைகளிடம் சொன்னார் ஆசிரியர். குழந்தைகள் வரைய ஆரம்பித்தனர். சிரித்தபடி வேகமாக வரைந்துகொண்டிருந்த முதல் வரிசைச் சிறுமியை நெருங்கினார் ஆசிரியர். "நீ யாரை வரைகிறாய்?" என்று கேட்டார்.

"கடவுளின் உருவத்தை வரைகிறேன்" என்றாள் சிறுமி.

"ஆனால், அவரைத்தான் யாரும் பார்த்ததில்லையே! அவர் எப்படி இருப்பார் என்று யாருக்கும் தெரியாதே?" என்றார் ஆசிரியர்.

"ஒரு நிமிஷம் காத்திருங்கள். நான் இதை வரைந்து முடித்துவிடுவேன். என் ஓவியத்தைப் பார்த்து, கடவுள் எப்படி இருப்பார் என்று தெரிந்துகொள்ளலாம்" என்றாள் சிறுமி.

இப்படிப்பட்ட நம்பிக்கையே எந்த வாய்ப்பையும் வசப்படுத்தித் தரும்.

தன்னை அறிந்தால்...

புயல் காற்றில் சிதைந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்த கழுகின் கூடு ஒன்றை ஒரு விவசாயி பார்த்தார். அதற்குள் கழுகின் ஒரு முட்டை இருந்தது. அது இன்னமும் கதகதப்பாக இருந்ததை அவர் உணர்ந்தார். 'புயல் அடித்தபோது கழுகு அதை அடை காத்தபடி இருந்திருக்கும்' என்பதைப் புரிந்துகொண்ட அவர், அதைப் பத்திரமாக எடுத்துப் போனார். அவர் வீட்டில் முட்டைகளை அடைகாத்துக் கொண்டிருந்த ஒரு கோழியின் மடியில் அதை வைத்தார்.

முட்டைகள் பொரித்துக் கோழிக்குஞ்சுகள் வெளியில் வந்தது போலவே, கழுகுக் குஞ்சும் பொரித்து வந்தது. கோழிக்குஞ்சுகளுடன் வளர்ந்த அது, தன்னையும் ஒரு கோழியாகவே நினைத்துக்கொண்டது. குனிந்து தரையைப் பார்த்தபடித் தோட்டத்தில் திரிந்து தானியங்களைத் தின்று பசிதீர்த்துக் கொண்ட அது, அரிதாகவே நிமிர்ந்து வானத்தைப் பார்த்தது. வானத்தில் உயரப் பறக்கும் வலிமையுள்ள சிறகுகள் தனக்கு இருப்பதாக அது உணரவே இல்லை.

முதுமையை நெருங்கும்போது ஒருநாள் அது வானத்தைப் பார்த்தது. உயரத்தில் ஒரு கழுகு கம்பீரமாகப் பறக்கும் காட்சியைக் கண்டது. 'நாமும் கழுகாகப் பிறந்திருந்தால், இப்படி வானத்தில் பறந்திருக்கலாமே' என அது நினைத்துக்கொண்டது.

தன்னை அறிந்துகொள்ளாதவர்களுக்கு உயர்வு கிடைப்பதில்லை.

வித்தியாசம் உண்டு!

அறிவுக்கும் ஞானத்துக்கும் வித்தியாசம் உண்டு. உதாரணமாக, தக்காளியைக் காய்கறி போலப் பயன்படுத்தினாலும், அது 'பழம்'தான் என்பதை உணர்த்துவது அறிவு. ஆனால், ஆப்பிள் போன்ற பழம் மாதிரி தக்காளியை ஜூஸ் போட்டுச் சர்க்கரை கலந்து குடிக்க முடியாது என்பதை உணர்வது ஞானம்.

குளிரும் முள்ளும்!

ஒரு காட்டில் எப்போதும் இல்லாத அளவுக்குக் குளிர் வாட்டி எடுத்தது. இரவிலும் அதிகாலையிலும் பனி அதிகமாகப் பொழிந்ததால், விலங்குகள் பெரிதும் சிரமம் அடைந்தன. குளிரைத் தாங்க முடியாமல் பல விலங்குகள் இறந்துவிட்டன.

அங்கு முள்ளம்பன்றிகள் ஓரிடத்தில் கூட்டமாக வாழ்ந்தன. ஒன்றை ஒன்று நெருங்கிப் பிடித்துக்கொண்டு ஒன்றாக இருந்தால், ஒன்றின் உடல்சூடு இன்னொன்றுக்குக் கதகதப்பு தரும் என்பது அவற்றுக்குப் புரிந்தது. ஆனால் அப்படி நெருங்கும்போது, அருகில் இருக்கும் முள்ளம்பன்றியின் முட்கள் உடலில் குத்திக் காயப்படுத்தின. முள்ளுக்குப் பயந்து விலகி நின்றால், குளிர் நடுக்கியது.

அப்போது அவை ஒரு விஷயத்தை உணர்ந்தன. காயத்தைப் பற்றிக் கவலைப்படாமல் நெருங்கி இருந்தால் வாழ முடியும். காயத்துக்குப் பயந்து விலகி இருந்தால், குளிரில் இறக்க நேரிடும். 'இறப்பதைவிடக் காயங்களைச் சகித்துக்கொண்டு வாழ்வதே மேல்' என்ற முடிவுக்கு அவை வந்தன.

நெருக்கமான உறவுகளில், நண்பர்கள் மத்தியில் இந்த விதியை நாம் புரிந்துகொள்ள வேண்டும். குறைகளே இல்லாத மனிதர்களைத் தேடிப் பிடித்து உறவு கொண்டாட முடியாது. அந்தக் குறைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களின் நல்ல பண்புகளை ரசித்து வாழப் பழகினால், வாழ்தல் என்றும் இனிது!

இதையும் சேர்த்துக் கொடுங்கள்!

'மீன் கொடுத்தால், அது ஒருவேளை பசியை மட்டுமே தீர்க்கும். மீன் பிடிக்கக் கற்றுக்கொடுத்தால், அது வாழ்நாள் முழுக்க வாழ வைக்கும்' என்று ஒரு பொன்மொழி சொல்வார்கள். 'அடுத்தவர்களுக்குச் செய்யும் உதவி எப்படி இருக்க வேண்டும்' என்பதற்காகச் சொல்லப்படுவது இது.

மீன்பிடிக்கக் கற்றுக்கொடுப்பதுடன் நிறுத்திவிடாமல், தூண்டில் உள்பட மீன் பிடிக்கத் தேவைப்படும் கருவிகளையும் வாங்கிக் கொடுக்க வேண்டும். அதுவே முழுமையான உதவி.

நிறைவு தரும் வாய்ப்பு!

மழை நாட்களில் பலர், 'உற்சாகமாக வெளியில் சுற்ற முடியவில்லையே' என ஏங்குவார்கள். குளிர் நாட்களில், வெயில் தரும் கதகதப்பை இழந்துவிட்டதாக வருந்துவார்கள். உச்சி வெயில் எப்போதும் கொளுத்தும் பகுதியில் வசிப்பவர்கள், குளிரான மலைப் பிரதேச வாழ்வை நினைத்து ஏங்குவார்கள். மலைகளில் எப்போதும் போர்த்தியபடி வாழ்பவர்களுக்கு, வெயிலை நினைத்து ஏக்கம் இருக்கும்.

குழந்தையாக இருக்கும்போது, 'எப்போது வளர்ந்து மற்றவர்கள் போலச் சுதந்திரமாகவும் மரியாதையாகவும் வாழ முடியும்' என்ற ஏக்கம் எழும். இளமைப் பருவத்தை அடையும்போது, 'குழந்தையாகவே இருந்திருக்கலாமே' என்ற நினைப்புத் தோன்றும். நடுத்தர வயதுக்கு வந்து பொறுப்புகளைச் சுமக்கும்போது, இளமைக் காலத்தில் கட்டுப்பாடு இல்லாமல் சுற்றித் திரிந்ததை நினைத்து ஏக்கம் பொங்கும்.

இந்தக் கணத்தில் நிறைவோடு வாழாமல், அக்கரையில் இருக்கும் பச்சையைத் தேடி ஏங்கும் மனதை விரட்டுவோம். வாய்ப்புகளைப் பற்றிக்கொண்டு நிறைவுடன் வாழ்வோம்.

நம்பிக்கையுடன் இலக்கை எட்டுங்கள்!

'முயற்சி திருவினையாக்கும்' என்று கற்றுக் கொடுத்த நம் முன்னோர்கள்தான், 'கிட்டாதாயின் வெட்டென மற' என்றும் ஒரு பழமொழி தந்திருக்கிறார்கள். நாம் எதைப் பின்பற்றுவது?

தெளிவாகச் சிந்தித்தால் வித்தியாசம் புரியும். நிறைவேறக் கூடிய இலக்குகளை வாழ்வில் வகுத்துக் கொள்ளும்போது முதல் பழமொழி ஞாபகம் வர வேண்டும். அமெரிக்க வேலைக்கு ஆசைப்படும் ஒருவர் ஆங்கிலம் கற்றுக்கொள்ள முடியும். அப்போது முயற்சி திருவினையாக்கும். 25 வயதில் ஒருவர், 'நான் இன்னும் அரை அடி உயரம் வளர வேண்டும்' என ஆசைப்பட்டால் நடக்குமா? அப்போது அதை வெட்டென மறப்பது நல்லது.

வேலை, தொழில், வியாபாரம், குடும்ப வாழ்க்கை, உடல்நலம், உறவுகள் என்று எல்லாவற்றிலும் இலக்குகள் வைத்து வாழலாம். திருவினையாக்கும் முயற்சிகளுடன் இலக்குகளை அடைய, இதையெல்லாம் செய்யுங்கள்...

- வெறும் ஆசை மட்டுமே எதையும் அடையப் போதுமானது இல்லை. அதற்காக உழைக்க வேண்டும். நம் இலக்கு எதுவோ, அதற்காக எப்படி உழைப்பது என்று அறிய வேண்டும்.
- இலக்கு என்ன என்பதைத் தெளிவாக மனம் உணர வேண்டும். நிறைவான வேலை, நிம்மதியான குடும்ப வாழ்க்கை, எடையைக் குறைத்து கச்சித உடல், புது வீடு என்று எதுவாக இருந்தாலும், அதை மனத்துக்கு உணர்த்துங்கள்.
- இலக்கு பொத்தாம்பொதுவாக இருக்கக் கூடாது. அளவிடக் கூடியதாக இருக்கவேண்டும். எடை குறைப்பது என்றால் எத்தனை கிலோ, அதிக சம்பளத்தில் வேலை என்றால் எவ்வளவு அதிகம், வீடு கட்டுவது என்றால் எப்படிப்பட்ட வீடு... இப்படி இலக்கு இருந்தால்தான், அதை நோக்கிய முயற்சியும் தெளிவாக இருக்கும்.
- இலக்கை அடைவதற்கான காலக்கெடுவும் கச்சிதமாக நிர்ணயிக்க வேண்டும். 'ஒரே வாரத்தில் ஐந்து கிலோ எடையைக் குறைப்பேன்', 'அடுத்த ஆண்டுக்குள் மூன்று மடங்குச் சம்பளம் வாங்குகிற வேலைக்குப் போவேன்' என்பது போன்ற நடைமுறைச் சாத்தியமில்லாத இலக்குகள் உங்களைச் சோர்வடைய வைக்கும்.

- இலக்கை அடையும் வழிகளைத் தேட வேண்டும். உடல் எடையைக் குறைப்பது இலக்கு என்றால், உணவிலும் உடற்பயிற்சியிலும் கவனம் வேண்டும். நல்ல வேலையே இலக்கு என்றால், அதற்கான தகுதியை வளர்க்க வேண்டும். முயற்சியே இலக்கை அடையும் ஏணி.
- இலக்கைப் பாதிக்கும் எதிர்மறை விஷயங்களை அகற்ற வேண்டும். 'எனக்கு நேரம் சரியில்லை என ஜோசியரே சொல்லிவிட்டார்', 'என்னைவிடக் குண்டாக எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் நன்றாகத்தானே வாழ்கிறார்கள்', 'எல்லோரும் ஜாலியாக டி.வி பார்த்து பொழுதுபோக்குகிறார்கள். நான் மட்டும் ஏன் படிக்க வேண்டும்'... இதுபோன்ற அபத்தமான எண்ணங்கள் வேண்டாம். அவர்கள் எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். உங்கள் இலக்கு வேறு... அதற்கு நீங்கள்தான் உழைக்க வேண்டும்.



- இலக்கை நோக்கிய பயணத்தில் என்ன சாதித்திருக்கிறோம் என அவ்வப்போது திரும்பிப் பாருங்கள். 'செல்லும் வேகம் சரியா', அல்லது 'இன்னும் முயற்சி வேண்டுமா' என்பதெல்லாம் புரியும்.
- இலக்கை நோக்கிய பாதையில் உங்கள் இரு கால்களாக முயற்சியும் நம்பிக்கையும் இருக்கட்டும். 'என்னால் முடியும்' என நம்புங்கள். அந்தத் தன்னம்பிக்கை பல அற்புதங்களை நிகழ்த்தும். ●

RAMRAJ ©
SHIRTINGS & SUITINGS
COTTON • LINEN • TRADITIONAL
Not Just Fabric.
Quality You Can Feel.
Culture You Can Wear.
Fabrics from Ramraj Cotton are woven for those who carry their heritage with quiet strength in every thread, every fold, every step. Because legacy isn't just remembered. It's worn.
STORE LOCATION
Shop Online at
www.ramrajcotton.in
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops

RAMRAJ
mithu
TOWELS
Pure Comfort.
Woven from nature's finest,
100% pure cotton and bamboo,
Mrithu Towels are crafted for
quick absorption, a gentle touch,
and effortless elegance
Made for everyday moments
that deserve a little more.
STORE LOCATION
Shop Online at
www.ramrajcotton.in
BAMBOO TOWELS
SIGNATURE TOWELS
TERRY TOWELS
STRIPED & CHECKERED TOWELS
SUPER SOFT & SUPER ABSORBENT
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops

Kokhila®
WOMEN'S INNERWEARS
BY
RAMRAJ®
STORE LOCATION
Shop Online at www.ramrajcotton.in
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops

RAMRAJ
LITTLE STARS
KIDS DHOTIS • SHIRTS
SCAN QR CODE FOR
STORE LOCATION
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

வெண்மை

சந்தாதாரர் ஆகுங்கள்!

'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

ஓர் ஆண்டு சந்தா ரூ.200

இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

வெண்மை
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

வங்கிக் கணக்கு விவரம்: Venmaii
A/C No: 1809135000000299
Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch
IFSC Code: KVBL0001809.

மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | **2 வருட சந்தா:** ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | **2 வருட சந்தா:** ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்

வாய்ப்பு தரும்

தன்னம்பிக்கை!

குட்டிப் பையன் ஒருவன் ஒரு நாள் தன் அம்மாவுடன் கடைக்குப் போனான். கடையில் அவன் தன் அம்மாவிடம் கேட்ட கேள்விகளைப் பார்த்து அந்தக் கடைக்காரர், 'பையன் சுட்டியா இருக்கானே' என்று பாராட்டினார். பாட்டிலில் இருந்து சாக்லேட்டை காட்டி, "எவ்வளவு வேணுமோ எடுத்துக்கோப்பா" என்றார்.

ஆனால் அந்தப் பையன் சாக்லேட்டை எடுக்கவே இல்லை. கடைக்காரர் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் எடுக்கவில்லை. "நீங்களே எடுத்துக் கொடுங்க" என்று கடைக்காரரிடம் சொன்னான். பிறகு அந்தக் கடைக்காரரே சாக்லேட்டை அள்ளி அவன் கைகளில் வைத்தார். அவன் ஆசையுடன் இரண்டு கைகளாலும் வாங்கிக் கொண்டான்.

வீட்டிற்குப் போனவுடன் அம்மா, "ஏன் சாக்லேட்டை பாட்டிலில் இருந்து நீயே எடுத்துக் கொள்ளவில்லை" என்று கேட்டார். "அம்மா, என் கையைப் பாருங்கள், எவ்வளவு சின்னதா இருக்குது. நானே பாட்டிலில் கைவிட்டு எடுத்திருந்தால் எனக்குக் கொஞ்சமாகத்தான் கிடைத்திருக்கும். அவர் எடுத்துக் கொடுத்ததால் எவ்வளவு அதிகமா சாக்லேட் கிடைச்சிருக்கு, பாருங்கள்" என்றான்.

ஒரு வாய்ப்பு நம் கண்ணெதிரே வரும்போது, அதை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நம் தன்னம்பிக்கை உயர்கிறது, வெற்றியும் கிடைக்கிறது. வாய்ப்பைத் தவறவிட்டுப் பிறகு வருந்துவோர் பலர். அப்படி இருக்கக்கூடாது. சரியான வாய்ப்பு நம்மைத் தேடி வரும்படி செய்ய வேண்டும். அப்படி வரும் வாய்ப்பை எந்த விதத்தில் வசப்படுத்துவது என்றும் திட்டமிட வேண்டும்.

'வீடு தீப்பற்றி எரிந்தால், அதில் குளிர் காயக் கற்றுக்கொள்' என்று ஸ்பெயின் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. கேட்பதற்குக் குரூரமாகத் தெரிந்தாலும், 'எவ்வளவு மோசமான நெருக்கடியிலும் ஏதோ ஒரு வாய்ப்பு நமக்காகக் காத்திருக்கும்' என்பதுதான் இதன் அர்த்தம். நெருக்கடிகளில் வாய்ப்பு தேடி புது வாழ்வு பெறுவதற்குப் பதிலாக, பலரும் வாழ்வில் சோர்ந்து விழுவதற்கு அதை ஒரு காரணமாகத் தேடுகிறார்கள். அந்த நெருக்கடியில் சிக்கிக்கொண்டு விரக்தியில் வீழ்கிறார்கள்.

'சிலந்தி வலைகள் ஒன்று சேர்ந்தால் சிங்கத்தையே கட்டிப் போடும்' என்று ஆப்பிரிக்க பழமொழி ஒன்று உண்டு. இதை யோசித்துப் பாருங்கள். சிறுசிறு மெல்லிய இழைகளை ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் கோர்த்து சிலந்தி

வலை பின்னும். தனித்தனியாக எடுத்தால் ஒவ்வொரு இழையும் ரொம்ப மெலிதாக, வலிமையற்றதாக இருக்கும். ஆனால் ஒன்று சேர்ந்தாலோ, அதன் மொத்த வலிமை மிக மிக அதிகமாகிவிடும்.

ஒரு சிலந்தி தான் வசிப்பதற்காகவே இந்த வலையைக் கட்டுகிறது. கூடவே, தனக்கான இரையைப் பெறவும் இதைப் பயன்படுத்துகிறது. சிறிய பூச்சிகள் சிலந்தி வலையில் சிக்கினால், அவற்றால் விடுபட முடியாது. அந்த வலையிலிருந்து மீள்வதற்குப் போராடிப் பார்த்து சோர்ந்து அவை வீழ்கின்றன. அப்போது சிலந்தி நெருங்கிவந்து அதை இரையாக்கிக்கொள்கிறது.

இதில் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். தான் பின்னிய வலையில் எப்படிச் செல்வது என்று சிலந்திக்குத் தெரியும். அது கச்சிதமாக ஒரு பாதையைத் தேர்வு செய்து அந்த வலையில் நகர்ந்து வருகிறது. ஒருபோதும் அது, தான் பின்னிய வலையில் சிக்கிக்கொள்வதில்லை. இரையாக விழும் பூச்சிகள் மட்டுமே அதில் சிறைபடுகின்றன.

ஆனால், மனிதர்கள் அப்படி இருப்பதில்லை. மன வலிமை இல்லாமல் இருப்பது மனதில் இருக்கும் ஒரு பெரிய குறைபாடு. நமக்கு எதிராக ஏதேதோ தடைகள் இருப்பதாகக் கருதிக்கொண்டு மனம் சோர்ந்துவிடுகிறது. யாரோ எதையோ பேசினால், 'அவர் சொல்வதுதான் சரி. எனக்கு இந்த வேலையைச் செய்து முடிக்கும் வலியும் திறமையும் இல்லை' என்று மனம் முடங்கிவிடுகிறது. எதிர்பாராத ஒரு பிரச்னை குறுக்கிடும்போது, 'எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. நான் முன்னேற வாய்ப்பு இல்லை. அதனால்தான் இப்படி நடக்கிறது' என்று விரக்தியில் வீழ்கிறது. சிலந்தியின் வலை போலவே இப்படி மனிதர்கள் ஏராளமான எதிர்மறை உணர்வுகளால் ஒரு வலைப்பின்னலை உருவாக்குகிறார்கள். அதில் தாங்களே போய்ச் சிக்கிக்கொள்கிறார்கள்.

'மனம் என்ன நினைக்கிறதோ அதுதான் செயலில் வெளிப்படும்' என்று உளவியல் அறிஞர்கள் கூறுவார்கள். மனம் உற்சாகமாக இருந்தால், நாம் மகிழ்ச்சியாக எதையும் செய்வோம். மனம் உறுதியாக இருந்தால், எந்தக் காரியத்தையும் கச்சிதமாக முடிப்போம். இதை வைத்து, 'மனநிலையே முக்கியம்' எனச் சொன்னார்கள்.

இப்போது இதைத் தலைகீழாகவும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அதாவது, 'நம் செயல்கள் மனதைப் பாதிக்கிறதா' என்ற ஆராய்ச்சி. "உண்மைதான். நம் ஒவ்வொரு செயலும் மனதில் தாக்கம் ஏற்படுத்துகிறது. உடல் அளவில் சோர்வாக இருந்தால், மனமும் சோர்ந்து போகிறது. கூனிக் குறுகி உட்கார்ந்தால், மனம் அவமானத்தில் தத்தளிக்கிறது. உற்சாகமாக உழைத்தால், மனமும் உற்சாகமாகிவிடுகிறது.

எனவே, மனதை நேர்த்தியாக வைத்திருப்பது உடலின் பொறுப்பு. உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது மனதின் பொறுப்பு. எந்தச் சூழலிலும் தன்னம்பிக்கையுடன் உழைத்தால் இது கைகூடும். ●

வாசகர் கடிதங்கள்!

நான் கடந்த சில வருடங்களாக 'வெண்மை' மாத இதழைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கிறேன். பள்ளி, கல்லூரிகளில் தன்னம்பிக்கைப் பேச்சாளராகச் செல்லும் நேரங்களில், நமது 'வெண்மை' இதழிலிருந்து நிறைய கருத்துகளை எடுத்து அங்கே பேசி பாராட்டுப் பெற்றிருக்கிறேன். இதற்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செப்டம்பர் இதழில் ராம்ராஜ் நிறுவனர் திரு.கே.ஆர். நாகராஜன் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், 'இருக்கும் பணத்தை, கிடைக்கும் வருமானத்தை மேலும் தொழிலை விரிவாக்க முதலீடு செய்தால் நிறைய பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். நிறைய குடும்பங்கள் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் அடையும்' என்கிற தனது நல்ல நோக்கத்தை வெளிப்படுத்தி இருந்தார். இதுபோன்ற நல்ல மனம் உள்ளவர்களால்தான் சமூகப் பொருளாதார நிலை உயர்ந்து வருகிறது. அவருக்கு எனது வாழ்த்துகளைச் சொல்வதை விட, அவருடைய செயல்பாடுகளுக்குத் தலைவணங்கிப் பாராட்டுத் தெரிவிக்கத் தோன்றுகிறது.

உழைப்பில் உண்மை, தொழிலில் நேர்மை, நிறத்தில் வெண்மை எனச் சிறப்பாக நடந்து வருகிறது ராம்ராஜ் நிறுவனம். அவர்களின் இந்த 'வெண்மை' இதழ் இன்னும் பல மக்களைச் சென்றடைந்து, அவர்கள் வாழ்க்கையில் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

– கவிஞர் எஸ்.ஏ.முத்து பாரதி, திருப்பூர்.

தன்னம்பிக்கை மொழிகள்!

- தனியாக நடக்கத் தயாராக இருங்கள். ஏனெனில், உங்களோடு பயணத்தை ஆரம்பிக்கும் பலர் நீங்கள் பயணத்தை முடிக்கும்போது வழியிலேயே காணாமல் போயிருப்பார்கள்.
- செயல் புரியாத மனிதனுக்குத் தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.
- முன்னோக்கிச் செல்வதற்குப் பல வழிகள் உள்ளன. ஆனால், அங்கேயே தேங்கி நிற்பதற்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே இருக்கும்.
- விழுவது எதற்குத் தெரியுமா? நாம் மீண்டும் எழுவதற்குக் கற்றுக்கொள்ளவே!
- தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்தச் செயலையும் செய்யாமல் பின்வாங்குவது இழிவானது.
- எந்தப் பிழையை நீங்கள் எங்கே கண்டாலும், அது உங்களிடம் இருந்தால் திருத்திக்கொள்ளுங்கள்.
- உள்ளக்கதவைத் திறந்து வையுங்கள். நாலா பக்கங்களிலும் இருந்து நல்ல விஷயங்கள் அதற்குள் நுழைய அனுமதி அளியுங்கள்.
- எல்லாப் பூக்களிடமிருந்தும் தேனைப் பெற்றுக் கொள்ளுங்கள். யாரிடமும் பகை பாராட்ட வேண்டாம். நட்புணர்வுடன் பழகுங்கள். ஆனால், உங்கள் சொந்தக்கருத்தை விடாப்பிடியாகப் பற்றுங்கள்.
- எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம். என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.
- உங்கள் சந்தேகங்களைச் சந்தேகப்படுங்கள்; உங்கள் நம்பிக்கைகளை நம்புங்கள்.
- எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம். ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம்.
- சில சமயங்களில் இழப்புதான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
- வெற்றியை ருசிக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும், ‘நம்மால் முடியும்’ என்ற நம்பிக்கையே முதல் முதலீடு!
- எதையும் செய்யத் தொடங்கும்போது, ‘நம்மால் முடியும்’ என நம்பிக்கை வையுங்கள்... உங்கள் இலக்கில் பாதி தூரம் போய் விடுவீர்கள்!
- ஜெயிக்க வேண்டும் என்றால், வெறுமனே வெற்றியைப் பற்றி மட்டுமே நினைக்காதீர்கள். நீங்கள் விரும்பும் எந்த ஒன்றையும் நேசித்து, அர்ப்பணிப்போடு முழு நம்பிக்கை வைத்து செய்யுங்கள்.
- உங்கள் மீது நம்பிக்கை வைத்து, தளராத உறுதியோடும் பெருமிதத்தோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் கடமையைச் செய்யுங்கள்; நீங்கள்தான் ஜெயிப்பீர்கள்.
- தங்களின் அழகிய கனவுகளில் நம்பிக்கை வைத்துச் செயல்படுகிறவர்களுக்கே எதிர்காலம் சொந்தமாகிறது.
- தன் திறமை மீது நம்பிக்கை வைத்துக் கடினமாக உழைப்பவர்களால் செய்ய முடியாத விஷயம் என இந்த உலகில் எதுவுமில்லை.
- உங்கள் கனவுகளைப் பின்தொடருங்கள்; உங்களை நம்புங்கள். ஒருபோதும் துவண்டு விடாதீர்கள்.
- இந்த உலகின் அத்தனை வசதிகளும் கருவிகளும் உங்கள் கைவசம் இருந்தாலும், உங்கள் மீது உங்களுக்கே நம்பிக்கை இல்லாவிட்டால் ஒரு பயனும் இல்லை.
- வழிகாட்டிகளும் ஆலோசகர்களும் நமக்குத் தேவைதான். ஆனால் இறுதியில் உங்கள் மீது உங்களுக்கு இருக்கும் நம்பிக்கைதான் ஜெயிக்க வைக்கிறது.
- மற்ற எவரும் உங்களை நம்பாதபோதும், உங்களை நீங்கள் நம்புங்கள். அந்த நம்பிக்கை தரும் பலன் மகத்தானது.
- உங்கள் மீது நம்பிக்கை வைத்து எதையும் செய்யுங்கள்; மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக எதையும் செய்யாதீர்கள். ●

இது இந்தியாவின் பெருமை!

நம் பாரம்பரிய உடையான வேட்டியை மதிப்பிற்குரியவர்களின் உடையாக மாற்றிய ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு.K.R. நாகராஜன் அவர்களின் வெற்றிகரமான புனிதப்பயணத்தை விவரிக்கிறது, 'அங்கீகாரம்' என்ற குறும்படம். ராம்ராஜ் காட்டன் யூடியூப் சேனலில் இது வெளியிடப்பட்டுள்ளது.

இது ராம்ராஜ் காட்டனின் கதை மட்டுமல்ல, நமது தேசிய உடையான வேட்டியின் கதை. பிறப்பிலிருந்து இறுதிவரை நம் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் வேட்டி நம்மோடு உள்ளது. வேட்டியே சுதந்திரப் போராட்டத்தின் அடையாளம், நம் பண்பாட்டுப் பெருமை. ராம்ராஜ் காட்டன் இந்த சாஸ்வதமான பாரம்பரியத்தை மீண்டும் உயிர்ப்பித்து, ஓர் இயக்கமாக மாற்றியுள்ளது. இந்தக் குறும்படம், ராம்ராஜ் காட்டன் நிறுவனம் மற்றும் பண்பாட்டின் உணர்ச்சிப்பூர்வமான பயணத்தை எடுத்துச் சொல்கிறது.

இந்தப் பயணத்தில் தான் சந்தித்த சவால்களையும் அவற்றை எதிர்கொண்டு சாதித்த சம்பவங்களையும் விவரிக்கிறார் திரு.K.R. நாகராஜன். இந்த வீடியோவைப் பார்த்துவிட்டு வந்த நூற்றுக்கணக்கான வாழ்த்துகளே, 'அங்கீகாரம்' குறும்படத்தின் சிறப்புக்குச் சாட்சி. அந்த வாழ்த்துகளில் ஒன்று இங்கே:

'உங்களுடைய வீடியோ ரொம்ப சிறப்பாகவும், ராம்ராஜ் காட்டன் உடைகள் போல மென்மையாகவும் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் இனிமையாகவும் இருக்கிறது. உங்களுடைய எண்ணமே வாழ்க்கையின் சிகரம் தொடக் காரணம். உங்கள் அலுவலகத்தில் உயரம் குறைவாக இருக்கக்கூடிய ஒரு நபரை நீங்கள் தேர்ந்தெடுத்து வேலைக்குச் சேர்த்தீர்கள் என்று சொல்லிவிட்டு அவர்கள் சொன்னார்கள். 'நீங்கள் அவருடைய உயரத்தைப் பார்க்கவில்லை. அவருடைய திறமையை மட்டும் பார்த்தீர்கள் என்று! உங்களுக்கு மனதைப் படிக்கும் சக்தி இருப்பதைப் போலவே திறமையைக் கண்டு உணர்வதும் அதிகம். உழைப்பை மதிக்கக்கூடிய பண்பு இது.

கிறிஸ்துவத்தில் ஒரு வாசகம், 'பரலோக ராஜ்ஜியம் பக்கத்தில் இருக்கிறது'. உங்கள் ராம்ராஜ் ராஜ்ஜியம் உங்கள் பக்கத்திலேயே இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தது உங்களுடைய எண்ணம்தான். உங்கள் அலுவலகத்தில் ஒருவர் ஹஜ் போனார். அவர் மட்டும் போகவில்லை, ராம்ராஜ் உடைகள் மூலம் நீங்களும் அவரோடு சேர்ந்து போய் இருக்கிறீர்கள். இப்படி ராம்ராஜ் உலக மக்கள் அனைவரிடமும் பரவ வேண்டும்.

வெண்மையிலே வெரைட்டியை உருவாக்குவது நீங்கள் மட்டும்தான் சார். வேட்டியைப் போலவே கோட் சூட்டிலும் வெண்மை ராம்ராஜின் பதிவு இருக்க வேண்டும். திருவண்ணாமலையில் இப்போது கிரிவலம் ரொம்ப பிரபலமாகி வருகிறது. இங்கு கிரிவலம் நடக்கிற எல்லா நண்பர்களும் ராம்ராஜ் சாக்ஸ் அணிந்து நடக்க வேண்டும். வாழ்க வளமுடன்.

– முரளி, திருவண்ணாமலை.

இதுபோன்ற எண்ணற்ற வாழ்த்துகள் ராம்ராஜ் காட்டனின் அர்த்தமுள்ள வளர்ச்சிப் பயணத்திற்குச் சிறந்த அங்கீகாரமாக அமைந்துள்ளது. இந்த வீடியோவை நீங்களும் காண இந்த க்யூ.ஆர் கோடை ஸ்கேன் செய்யவும்.

ஜெயித்தவர்களிடம் என்ன இருக்கிறது?

- எப்படியும் சாதிக்க வேண்டும் என்ற வேட்கை இருக்கிறது.
- வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வைராக்கியம் இருக்கிறது.
- இதில் ஜெயித்தே ஆக வேண்டும் என்ற வீம்பு இருக்கிறது.
- வாழ்வில் அடைவதற்கு என்று ஒரு லட்சியம் இருக்கிறது.
- அந்த லட்சியத்தை அடைவதில் ஒரு தீவிரம் இருக்கிறது.
- வாய்ப்பு எங்கே இருக்கிறது என்று தேடும் தாகம் இருக்கிறது.
- வாய்ப்புகளைத் தேடி உருவாக்கிக்கொள்ளும் திறமை இருக்கிறது.
- சலிக்காமல் நாள் முழுக்க உழைக்கும் எண்ணம் இருக்கிறது.
- தடைகளிலும் தோல்விகளிலும் தளராத மனம் இருக்கிறது.
- விழுந்தாலும் எழுந்து மீண்டும் நடக்கும் துணிவு இருக்கிறது.
- தங்கள் திறமைக்கு ஏற்ற இடம் எது என்ற தேடல் இருக்கிறது.
- சூழ்நிலைகளுக்கு ஏற்ப அனுசரித்துப்போகும் அடக்கம் இருக்கிறது.
- விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு மாறும் விவேகம் இருக்கிறது.
- அறிவு, திறமையை முழுமையாகப் பயன்படுத்தும் மூளை இருக்கிறது.
- இலக்குகளுக்காக மட்டுமே நேரத்தை ஒதுக்கும் அக்கறை இருக்கிறது.
- பொழுதுபோக்குகளில் நேரத்தை வீணடிக்காத பொறுப்பு இருக்கிறது.
- தங்கள் வளர்ச்சியை அடிக்கடி அளந்து பார்க்கும் ஆர்வம் இருக்கிறது.
- அத்தனைக்கும் அடித்தளமாக, உறுதியான தன்னம்பிக்கை இருக்கிறது.

நீ நீயாக இரு!

மரங்கள் அடர்ந்த சோலை ஒன்றில் வசித்தார் ஒரு ஞானி. பலரும் அவரிடம் சென்று தங்கள் குறைகளைச் சொல்லித் தீர்வு கேட்பார்கள். நாட்டிலேயே புகழ்பெற்ற பேராசிரியர் ஒருவர் அப்படி ஞானியைத் தேடி வந்தார். "நான் நிறைய படித்திருக்கிறேன். ஆனால், என்னிடம் ஆலோசனை கேட்க யாரும் வருவதில்லை. உங்களிடம்தான் வருகிறார்கள். உங்களைப் போல என்னால் மன அமைதியுடனும் இருக்க முடியவில்லை. ஏன்?" என்று கேட்டார்.

"இன்று முழுவதும் என்னுடன் இரு. உனக்கு உண்மை புரியும்" என்றார் ஞானி. அன்று வழக்கம் போலப் பலரும் வந்து ஞானியிடம் உரையாடினர். இரவு வந்தது. அன்று பௌர்ணமி. முழு நிலவு வானில் அழகுடன் ஜொலித்தது. குழந்தைகள் பலர் நிலா வெளிச்சத்தில் விளையாடினர்.

இன்னும் நேரமானதும் கூட்டம் கலைந்தது. ஞானியின் குடிலுக்கு வெளியே உயர்ந்த மரமும், அழகிய செடியும் மட்டும் காற்றில் ஆடிக் கொண்டிருந்தன. வேறு அசைவுகளே இல்லை. "உன் கேள்விக்குப் பதில் கிடைத்ததா?" என்று பேராசிரியரிடம் கேட்டார் ஞானி.

"இல்லை, என்னிடம் நீங்கள் எதுவும் சொல்லவில்லையே?" என்று பேராசிரியர் பொறுமையிழந்து பேசினார்.

ஞானி சொன்னார். "அந்த நிலவைப் பார். குழந்தைகள் விளையாடியபோதும் அது வெளிச்சம் தந்தது. யாருமே இல்லாதபோதும் வெளிச்சம் தருகிறது. 'பார்க்க யாருமே இல்லாத காட்டில் ஏன் ஒளிரவேண்டும்' என அது நினைத்ததில்லை. இந்த உயர்ந்த மரமும் அதன் அருகில் உள்ள செடியும் வெகு நாட்களாக இங்கு இருக்கின்றன. ஒரு நாளும் இந்தச் செடி, 'நான் ஏன் இந்தப் பெரிய மரம் போல இல்லை' என்று மரத்திடம் கேட்டதில்லை. மரமும் அந்தச் செடியிடம், 'நான் ஏன் செடி போல இல்லை' என்று கேட்டதில்லை. மரம் தான் மரமாக இருப்பதிலும், செடி தான் செடியாக இருப்பதிலும் மகிழ்ச்சியாகவே உள்ளன. ஒப்பீடுதான் மனிதனின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் காரணம். நீ நீயாக இரு!"

பேராசிரியர் உண்மை புரிந்து விடைபெற்றுக் கிளம்பினார்.

சந்தோஷம் பொங்கட்டும்!

நாம் செய்தது தப்பு என்பதை உணர்ந்த விநாடியில் மன்னிப்புக் கேட்கத் தெரிந்தால், நாம் ரொம்பத் தெளிவாக, உண்மையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். இன்னொருவர் ஏதோ தப்பு செய்துவிட்டு வந்து நம்மிடம் மன்னிப்புக் கேட்கும்போது மனதார மன்னிக்கத் தெரிந்தால், நாம் ரொம்பத் தைரியமாக, பலசாலியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். மற்றவர்கள் தந்த கஷ்டங்களை, ஏற்படுத்திய காயங்களை ஞாபகத்தில் வைத்திருக்காமல் உடனே மறக்கத் தெரிந்தால், இந்த உலகத்திலேயே நாம்தான் ரொம்ப சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். எந்த விமர்சனத்துக்கும் நொறுங்கிப் போகாமல் நம் வழியை மட்டும் பார்த்து முன்னேறத் தெரிந்தால், நாம் மிகுந்த தன்னம்பிக்கையுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று அர்த்தம்.

அவமானம் அடையாதீர்கள்!

தோல்வி அடையும்போது அதிருப்தி ஏற்படுவது இயற்கைதான். ஆனால் அந்த அதிருப்தியானது உங்களை இயலாதவராக, அவமானப்பட்டவராக உருமாற்ற இடம் கொடுக்காதீர்கள். எதையோ சாதிப்பதற்காகவே நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். அது என்னவென்று தெரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களுடைய வேதனைகளை நினைத்து வருத்தப்படாதீர்கள். அப்படி வருத்தப்பட்டாலும் அதை வெளியில் சொல்லாதீர்கள். முக்கியமாகச் சுய இரக்கம் என்பது கூடாது. உங்களை யாராவது விரும்பாவிட்டால் அது அவர்களுடைய பிரச்னை. அதுபற்றி நீங்கள் வருத்தப்பட வேண்டிய தேவை இல்லை.

கண்ணாடியாக மாறுங்கள்!

ஒரு கண்ணாடியை 100 துண்டுகளாக உடைத்தாலும், அத்தனை துண்டுகளும் தன் இயல்பு மாறாமல் எந்த உருவத்தையும் பிரதிபலிக்கும். எவ்வளவு மோசமாக நொறுங்கிப் போனாலும், தன் சுயத்தை இழந்துவிடாத இந்தக் குணத்தை கண்ணாடியிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எத்தனை கஷ்டங்கள், தடைகள் வந்தாலும், நம்மிடம் இருக்கும் நம்பிக்கையை விட்டுவிடக் கூடாது. வெற்றி கிடைக்கும்போது வருகிற தன்னம்பிக்கைக்கு ஆயுள் குறைவு; தன்னம்பிக்கை இருப்பதால் கிடைக்கும் வெற்றிதான் அழகு!

அப்துல் கலாமின் தன்னம்பிக்கைப் பாடம்!

மல்யுத்தம் செய்வதில் திறமைசாலியான ஒரு வீரன் இருந்தான். தனி ஆளாக நூறு பேரை வீழ்த்தும் சக்தி படைத்தவன். போட்டியில் பங்கேற்று அவன் மேடை ஏறினாலே, எதிரில் இருப்பவர்கள் நடுங்குவார்கள்.

அப்படிப்பட்ட மாவீரனுக்கு, ஒரு போட்டியில் திடீரெனத் தடுமாற்றம் ஏற்பட்டது. இளம் வீரன் ஒருவன் சளைக்காமல் ஈடு கொடுத்தான். நீண்ட நேரம் மோதி ஒருவழியாக அந்த இளைஞனை வீழ்த்தினான் மாவீரன். என்றாலும், 'நாம் இன்னும் பயிற்சி பெற வேண்டும்' என்ற எண்ணம் அவனுக்கு வந்தது.

ஒரு குருவைத் தேடிச் சென்றான். "நூறு பேரை வீழ்த்தும் பலம் எனக்கு இருக்கிறது. அந்தச் சக்தியை இன்னும் அதிகரிக்க வேண்டும். எனக்குப் பயிற்சி கொடுங்கள்" என்றான். குரு அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் பயிற்சியில் சேர்த்துக்கொண்டார்.

அவன் இதுவரை அறியாத பல புதிய யுக்திகளை அவர் கற்றுக்கொடுத்தார். சில மாதங்கள் கடந்தன. குரு அவனை அழைத்து, "இப்போது உன்னால் எத்தனை பேரை வீழ்த்த முடியும்?" என்று கேட்டார். "முன்பு நூறு பேரை வீழ்த்தும் சக்தி இருந்தது. இப்போது புதிதாகக் கற்றுக்கொண்டதை வைத்து 200 பேரை வீழ்த்துவேன்" என்றான். "உனக்கு இன்னும் பயிற்சி தேவைப்படுகிறது" என்றார் குரு. முன்பைவிடக் கடுமையான பயிற்சிகள் தரப்பட்டன.

இன்னும் சில மாதங்கள் கடந்தன. இப்போது அவனை அழைத்த குரு, மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார். "இப்போது உன்னால் எத்தனை பேரை வீழ்த்த முடியும்?" அந்த மாவீரன் பணிவுடன் சொன்னான். "குருவே! அதை நான் எப்படிச் சொல்ல முடியும்? என் பலத்தை என் எதிரிகள் அல்லவா தீர்மானிக்க வேண்டும்" என்றான். புன்னகைத்த குரு, "உனக்குப் பயிற்சி முடிந்தது. நீ போகலாம்!" என்று ஆசீர்வதித்து அனுப்பினார்.

நெருக்கடியான சூழல்களே நம் திறமையின் சோதனைக்களங்கள். நமது தன்னம்பிக்கையின் பயிற்சிப் பாதைகள். நம்பிக்கையுடன் செயலில் இறங்கும் எவருக்கும், இந்த உலகமே அத்தனை வாய்ப்புகளையும் வாசல் திறந்து வெளிப்படுத்தும். தன்னம்பிக்கை இருக்கும் ஒருவரால் மட்டுமே உயர்வின் சிகரத்தை வசப்படுத்த முடியும்.

தன்னம்பிக்கை என்னென்ன மாயங்கள் செய்யும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் சொன்ன விஷயங்கள் இங்கே:

1. கரிகாலன் முடியாது என்று நினைத்திருந்தால் தமிழ்நாட்டில் கல்லணை கிடையாது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முடியாது என்று காந்தியடிகளும், சுதந்திரப் போராட்ட வீரர்களும் நினைத்திருந்தால், நமக்குச் சுதந்திரம் கிடைத்திருக்காது. சி.சுப்பிரமணியமும், எம்.எஸ்.சுவாமிநாதனும் முடியாது என்று நினைத்திருந்தால், இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருக்காது. வர்கீஸ் குரியன் முடியாது என்று நினைத்திருந்தால், இந்தியா பால்வளத்தில் தன்னிறைவு அடைந்திருக்காது. விக்ரம் சாராபாய் முடியாது என்று நினைத்திருந்தால் இன்று செயற்கைக்கோளை இந்தியா ஏவியிருக்க முடியாது. 'முடியாது' என்ற நோய் பல பேரிடம் அதிகமாக உள்ளது. முடியும் என்று நம்பும் மனிதர்களால்தான் வரலாறு படைக்கப்பட்டு இருக்கிறது. 'முடியும்' என்ற நம்பிக்கை முதலில் ஒவ்வொரு இந்தியனுக்கும் வேண்டும்.



2. மனித நாகரிகம் வளர்ந்ததற்குக் காரணமே 'வீரம்'தான். மனிதன் எடுத்து வைத்த ஒவ்வொரு காலடிக்கும் வீரம் தேவைப்பட்டது என்பதுதான் வரலாறு. தன்னுடைய பிரதேசத்தைக் காத்துக்கொள்ள வீரம் தேவைப்பட்டது. புதிய வாசல்களைத் திறக்க, புதிய இடங்களைத் தேடிச் செல்ல, வீரம் தேவைப்பட்டது. பழமையை மீறவும் புதுமைகள் செய்யவும் வீரம் தேவைப்பட்டது. சக மனிதனின் கண்ணீரைத் துடைத்துப் புரட்சிகளை உருவாக்க வீரம் தேவைப்பட்டது. மனிதநேயம் என்கிற பேனாவில் வீரம் என்னும் மையினால் எழுதப்பட்டதுதான் மனித இனத்தின் வரலாறு.

3. உங்களால் மாற்ற முடியாதவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் உங்களை வரவேற்கும் சக்திகளும், அறவே எதிர்க்கும் சக்திகளும் இருக்கத்தான் செய்யும். பலனளிக்கும் ஆற்றல்கள், பயனற்ற ஆற்றல்களின் வேறுபாடுகளைத் தெளிவாகத் தெரிந்து, உங்களின் வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. கனவு காணுங்கள்... கனவு காணுங்கள்... கனவு காணுங்கள்... அதன்பின் கனவுகளை எண்ணங்கள் ஆக்கி, பிறகு செய்கையாக்குங்கள். பெரிதாகச் சிந்தனை செய்யுங்கள். உங்கள் சிந்தனைகள் நம் தேசத்தின் அத்தனை கோடி மக்களுக்கும் தகுதி பெற்றதாய் அமைய வேண்டும். அப்படிச் செய்தால்தான் பெரிய அளவில் நாம் முன்னேற முடியும்.

5. இமயத்தின் உச்சியை எட்டித் தொடுவதாயினும் சரி... அல்லது உங்கள் வாழ்க்கைப் பணியின் உச்சத்தை அடைவதாயினும் சரி... மேலே ஏறிச் செல்ல ஒருவருக்கு மிகுந்த மன உறுதி தேவைப்படுகிறது.

6. மாணவப் பருவத்தில் பல்வேறு தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்தத் தேர்வு முடிவுகள் எதிர்பார்த்தவாறு அமையாவிட்டால், அதற்காக மனம் சோர்ந்துவிட வேண்டியதில்லை. தேர்வு முடிவுகள்தான் வாழ்க்கையில் இறுதியானது எனக் கருத வேண்டாம். கடவுள் நம்முடன் இருப்பாரானால், ஒருவரும் உங்களுக்கு எதிராகச் செயல்பட முடியாது. தொடர்ந்து முயற்சி செய்தால், நிச்சயம் வெற்றி கிட்டும். தற்காலிகமான பின்னடைவுக்காக மனம் சோர்ந்து போய்விட வேண்டாம்.

7. வெற்றி எப்போதுமே மகிழ்ச்சியைத் தரும். பல காரணங்களால் சில சமயம் பின்னடைவைச் சந்திக்க வேண்டியிருக்கும். இதையும் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் சில எதிர்பாராத பிரச்னைகளை எதிர்கொள்வதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும். பிரச்னைகள் நம்மை மேலாதிக்கம் செய்ய அனுமதிக்கக் கூடாது. நாம்தான் பிரச்னைகளை மேலாதிக்கம் செய்ய வேண்டும். பிரச்னைகளைத் தோல்வியுறச் செய்து, வெற்றி காண வேண்டும்.

நீங்கள் நட்சத்திரமாக ஜொலிக்க விரும்பினால், நீங்கள் யார் என்பது முக்கியமல்ல... உங்கள் மனம் எதை விரும்புகிறதோ, அது நிச்சயம் உங்களை வந்து சேரும். ●

தன்னம்பிக்கையைத் தரும் அறிவு!

ஒரு கிராமத்தில் முட்டாள் ஒருவன் இருந்தான். எல்லோரும் அவனைக் கேலி செய்தார்கள். ஓடாத கடிகாரம்கூட ஒரு நாளில் இரண்டு முறை சரியான நேரத்தைக் காட்டும் அல்லவா?அப்படி அவன் எப்போதாவது சில விஷயங்களைச் சரியாகச் செய்தாலும், அவனைப் பார்த்து எல்லோரும் சிரித்தனர்.

அவன் மிகுந்த கவலையுடன் ஒரு துறவியிடம் போய் இதைச் சொல்லி அழுதான். "எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்" என்றான். அவன் மீது கருணை கொண்ட துறவி, "நீ ஒரு விஷயம் செய். யார் எது சொன்னாலும் விவாதம் செய், மறுத்துப் பேசு! 'வெயில் கொளுத்துகிறது' என்று யாராவது சொன்னால், சூரியனின் கருணையைப் பற்றிப் பேசு. 'மாங்காய் புளிக்கிறது' என்று யாராவது சொன்னால், 'அந்தப் புளிப்பில் ஓர் இனிப்பு இருப்பதை நீங்கள் கவனிக்கவில்லையா' என்று கேள். இப்படியே தொடர்ந்து விவாதம் செய். எல்லாம் சரியாகிவிடும்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

சில நாட்கள் கழித்துத் துறவி அந்த ஊருக்குத் திரும்பியபோது ஆச்சர்யமான காட்சியைக் கண்டார். அந்த முட்டாள் ஒரு மரத்தடியில் அமர்ந்து ஏதோ பேச, ஏராளமான மக்கள் அதைப் பணிவுடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

கதைதான் என்றாலும் இது ஓர் ஆழமான உண்மையை நமக்கு உணர்த்துகிறது. நாம் எப்படிப்பட்டவர் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை மற்றவர்களிடம் கொடுப்பது ஆபத்து. நம் திறமை, பலம், புத்திசாலித்தனம் என்று பலவற்றை அடுத்தவர்கள் தவறாக மதிப்பிட்டு நம் தன்னம்பிக்கையை நொறுக்கிவிடக்கூடும். அவர்களின் மதிப்பீட்டை மனதுக்குக் கொண்டு போவது தவறு.

நம் அனைவருக்குமே வெளி உலகத்தைத் தாண்டிய தனி உலகம் என்று ஒன்று இருக்கும். அதை உங்களின் இரண்டாம் உலகம் என்று சொல்லலாம். அதுதான் நம் மனம். அந்த உலகத்தில் இருக்கும் எதுவோ அதுதான் நாம். அந்த உலகத்தில் நம் எண்ணங்கள் எவ்வாறு இருக்கிறதோ, அவையே நம் எண்ணங்களாக வெளிப்படும். அந்த உலகத்தில் நாம் என்ன செய்ய நினைக்கிறோமோ, அவையே நம் செயல்களாக மாறும். அந்த மன உலகத்தை நேர்மறையாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் வைத்திருக்க வேண்டியது நம் பொறுப்பு. அந்த இரண்டாம் உலகமே, நாம் இந்த உலகில் எப்படி வாழப் போகிறோம் என்பதைத் தீர்மானிக்கிறது.

உங்களுடைய அந்த இரண்டாம் உலகத்தைச் சிறப்பானதாக வைத்துக்கொள்ளுங்கள். உண்மையில் அது உங்களுக்கே தெரியாமல் உங்களைச் சிறப்பானவர்களாக உருமாற்றம் செய்யும். வெளியுலகத்தில் ஆயிரம் பேரிடம் ஆயிரம் விதமாக நம்மை நாம் காட்டிக் கொள்ளலாம். ஆனால் யாரும் அறியாத உங்களுடைய அந்த இரண்டாம்

உலகம்தான், உங்கள் வாழ்க்கையை வழிநடத்தும். அந்த மன உலகில் தன்னம்பிக்கையை நிரப்பி, எதிர்மறை உணர்வுகளைத் துரத்துங்கள்.

தேவையற்ற சுமைகளை உதறித் தள்ளுவதால்தான் ஒரு ராக்கெட்டால் விண்வெளிக்குச் செல்ல முடிகிறது. அதுபோலச் சில தவறான பழக்கங்களை உதறித் தள்ளினால், உங்களால் வாழ்வில் உயர்ந்து செல்ல முடியும். அவை:

- மற்றவர்களின் கருத்துகள் உங்கள் வாழ்வைத் தீர்மானிப்பதை அனுமதிக்காதீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகளின்படி உங்கள் வாழ்வு அமையட்டும். உங்களுக்கு எது சிறந்தது என்பது மற்றவர்களைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

- கடந்த காலத் தவறுகளுக்காக அவமானம் அடையாதீர்கள். கடந்த காலம் போலவே எதிர்காலமும் இருக்கப் போவதில்லை. நீங்கள் இன்று செய்யும் முயற்சிகளே, உங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கும்.

- வேலை, தொழில், வியாபாரம், திருமணம், வீடு போன்ற வாழ்வின் முக்கியமான விஷயங்களில் குழப்பமான முடிவுகள் வேண்டாம். நன்கு யோசியுங்கள். ஆனால், தெளிவான முடிவு எடுங்கள். முடிவெடுக்கத் தெரியாதவர்கள் முன்னேறுவதில்லை.

- வாழ்வில் நமக்கு இரண்டு வாய்ப்புகள் இருக்கின்றன. ஒன்று, நாம் இருக்கும் சூழலைக் குறை சொன்னபடி அப்படியே இருப்பது. இரண்டு, அந்தச் சூழலை மாற்ற முயற்சி எடுப்பது. எப்போதும் இரண்டாவது வாய்ப்பைத் தேர்ந்தெடுங்கள்.

- ஒவ்வொரு நாளும் நமக்குப் புதிய வாய்ப்புகளைத் தருவதற்காகவே விடிகிறது. சோம்பலுடன் அவற்றைப் புறக்கணிப்பவர்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை.

- ‘எனக்கு எல்லாமே தெரியும், நான் சரியான முடிவுகளையே எப்போதும் எடுக்கிறேன்’ என்று நினைப்பவர்களுக்கு ஏற்றம் இருக்காது. எந்தத் துறையில் இருந்தாலும், புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை எப்போதும் இருக்கும். அப்படிக் கற்றுக்கொள்பவர்களே சரியான முடிவுகள் எடுக்க முடியும்.

- பிரச்னைகளை எதிர்கொள்ளாமல் விலகி ஓடுவது தவறு. துணிச்சலுடன் அவற்றைச் சந்தித்து தீர்வு தேடுங்கள். மற்றவர்களின் உதவி தேவை எனில் கேளுங்கள். உதவியவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்.

- எதிர்பார்த்தபடி ஒன்று நடக்காவிட்டால், அடுத்தவர்களைக் குற்றம் சொல்வதும், சூழ்நிலை மீது பழி போடுவதும் சராசரி மனிதர்களின் வாடிக்கை. காரணங்களை அறிந்து, அவற்றைச் சரிசெய்யும் முயற்சியில் இறங்குவதே வெற்றியாளர்களின் வழி. அந்த வழியில் செல்லுங்கள்.

- இழந்த வாய்ப்புகளை நினைத்து வருந்தியபடி வாழ்பவர்கள் ஒரு ரகம். கிடைத்த வெற்றிகளை ஆசீர்வாதமாகக் கருதி உற்சாகமாக அடுத்த கட்டத்துக்குச் செல்பவர்கள் இன்னொரு ரகம். எப்போதும் உற்சாகத்தை இழக்காதீர்கள்.

- ‘ஏதோ ஓர் அற்புதம் நிகழ்ந்தால்தான் நமக்கு மகிழ்ச்சி கிடைக்கும்’ என்று காத்திருப்பவர்கள், கடைசிவரை அப்படியே இருப்பார்கள். ஒவ்வொரு நாளிலும் கிடைக்கும் சின்னச் சின்ன சந்தோஷங்களை அனுபவித்து வாழ்பவர்கள் நிறைவு பெறுவார்கள். நீங்கள் அந்த நிறைவைப் பெறுங்கள்! ●

வெண்மை சந்தா...

மகளிர் தின சிறப்புச் சலுகை!

மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~280~~/–
மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–

இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–
மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

தன்னம்பிக்கையுடன் வேலையை அடையுங்கள்!

ஒரு வேலைக்கான நேர்முகத் தேர்வுக்குச் செல்கிறீர்கள். அங்கே உங்களைப் போலவே கல்வித்தகுதி கொண்ட பலர் இருப்பார்கள். அனுபவமும் அதே அளவு இருக்கும். திறமைக்கான சான்றிதழ்களும் இருக்கும். தாங்கள் மதிப்பு மிக்கவர்கள் என்பதைக் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லி உணர்த்தவும் அவர்களால் முடியும். இப்படி எல்லோரும் ஒரே மாதிரி இருக்கும்போது, யாரைத் தேர்வு செய்வது என்று அந்த நிறுவனத்துக்குக் குழப்பம் ஏற்படும். கூட்டத்திலிருந்து உங்களைத் தனித்துவமாகக் காட்டி அந்த வேலையை வசப்படுத்தச் சில வழிகள்:

● 'உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்' என்று கேட்டால், இங்கே படித்தேன், இங்கே இத்தனை ஆண்டுகள் வேலை பார்த்தேன், இந்த புரொமோஷன் வாங்கினேன் என்று பட்டியலையே பலர் சொல்வார்கள். அதைச் சுவாரசியம் கூட்டி ஒரு கதை போலச் சொல்லுங்கள். அந்த வேலையில் சந்தித்த ஒரு சவாலை எப்படிச் சமாளித்தேன் என்று சொல்லலாம். நீங்கள் எடுத்த ஒரு முடிவு எப்படி நிறுவனத்துக்கு உதவியாக இருந்தது என்பதைக் குறிப்பிடலாம். இது உங்களை வித்தியாசப்படுத்தும்.

● இன்டர்வியூவுக்குச் செல்வதற்கு முன்பாக அந்த நிறுவனம் பற்றி அறிந்துகொள்ளுங்கள். இணையத்தில், சமூக வலைதளங்களில், நண்பர்கள் மூலம் தகவல்கள் ஏராளம் கிடைக்கும். அவற்றைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். அந்த நிறுவனத்தில் உங்களுக்குப் பிடித்த விஷயங்கள் என மூன்று, நான்கு சொல்லி, அதையெல்லாம் பாராட்டுங்கள்.

● எல்லா இன்டர்வியூக்களிலும் சம்பிரதாயமாக, 'இந்த வேலைக்கு நீங்கள் பொருத்தமானவர் என்பதற்குக் காரணம் சொல்லுங்கள்' என்று ஒரு கேள்வி கேட்பார்கள். இன்டர்வியூவில் மிக முக்கியமான கேள்வி இதுதான். 'நேரம் காலம் பார்க்காம உழைப்பேன்', மத்தவங்களோட குழுவா சேர்ந்து வேலை செய்வேன்', 'எல்லாத்தையும் அனுசரித்துக்கொண்டு வேலை பார்க்க என்னால் முடியும்' என்பவை எல்லாம் அவர்கள் பலமுறை கேட்ட பதில்களாக இருக்கும். அவர்கள் எதிர்பார்க்காத ஒரு பாசிட்டிவ் பதிலைச் சொல்லி அசத்துங்கள்.

● 'உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருக்கா' என்று இன்டர்வியூவின் முடிவில் கேட்பார்கள். சில பேர் தயக்கத்துடன், 'எனக்கு ஒன்றும் கேள்விகள் இல்லை சார்' என்று மறுத்துவிடுவார்கள். 'எவ்வளவு நாளில் ரிசல்ட் தெரியும்', 'என்ன சம்பளம்', 'ஏதாவது டிரெய்னிங் தருவீங்களா' என்றெல்லாம் சிலர் கேட்பார்கள். அதையெல்லாம் தவிர்த்துவிடுங்கள். 'இந்த வேலையில் எனக்கான சவால் என்ன', 'இந்த வேலையை எப்படிச் செய்தால் நான் முன்னேறலாம்', 'இந்த நிறுவனத்துக்கு நான் ஏற்கப்போகும் இந்த வேலை எந்த அளவுக்கு முக்கியமானது' என்றெல்லாம் கேள்விகள் கேட்டால், அவர்கள் அக்கறையுடன் பதில் சொல்வார்கள். உங்களைப் பற்றிய மதிப்பும் உயரும்.

● சம்பளம், இதரச் சலுகைகள், புரொமோஷன், வாய்ப்புகள் என்றே பலரும் பேசிக்கொண்டு இருப்பார்கள். நீங்கள் அப்படி இருக்காதீர்கள். இந்த வேலையின் மூலம் நீங்கள் அடையும் நிறைவு பற்றிப் பேசுங்கள். இந்த வேலை தரும் மதிப்பு பற்றி உரையாடுங்கள். நீங்கள் செய்யும் வேலையை எந்த அளவுக்கு நேசிக்கிறீர்கள் என்பதை உணர்த்துங்கள். வேலையை நேசிப்பவர்களை எந்த நிறுவனமும் நேசிக்கும். ●

திருப்பூர் கம்பன் விழாவில் ராம்ராஜ்!

‘கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம்’ என்ற தலைப்பில், திருப்பூர் கம்பன் கழகம் சார்பில், திருப்பூர் யுனிவர்சஸ் சாலையில் உள்ள ஹார்வி குமாரசாமி மண்டபத்தில் கம்பன் விழா நடைபெற்றது. இதற்குத் தமிழ்நாடு நூற்பாலைகள் சங்கத் தலைவர் திரு. அப்புக்குட்டி தலைமை தாங்கினார். கம்பன் கழகச் செயலாளர் திரு. ராமகிருஷ்ணன் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் தமிழ்ப் பணிக்காக ‘வாகீச கலைவாணி’ விருதினைப் பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி. பாரதி பாஸ்கருக்கு, திருப்பூர் கம்பன் கழகத் தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. கே.ஆர்.நாகராஜன் வழங்கினார்.

அப்போது திரு. கே.ஆர்.நாகராஜன், ‘‘வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என கம்பர் வழிகாட்டினார். குழந்தைகளுக்குத் தொழில், சொத்து, வசதிகள் என்று சேர்த்து வைப்பதைவிட, ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். அதன் வழியே அவர்கள் எல்லாவற்றையும் அடைவார்கள்” என்று கூறினார்.

விருதைப் பெற்றுக்கொண்ட திருமதி. பாரதி பாஸ்கர் பேசுகையில், “இலக்கிய இன்பத்துக்காகப் படிப்பதில்லை கம்பராமாயணம். தனிமனித ஒழுக்கத்தைக் கற்கப் படிக்க வேண்டும். கம்பராமாயணமும், வள்ளுவமும், தனிமனித ஒழுக்கத்துக்கு வழிகாட்டிகள். எத்தகைய சோதனைகள் வந்தாலும், நேர்மை தவறாமல் வாழ வேண்டுமென வழிகாட்டும் மாபெரும் இலக்கியங்கள்” என்று பேசினார்.

கம்பன் விழாவில் நடைபெற்ற சிறப்புப் பட்டிமன்றத்தில் ‘கம்பன் காவியத்தில் எந்தத்தம்பி’ என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. ‘லட்சுமணனே’ என்ற அணியில் புதுகை பாரதியும், கோவை ஞானாம்பிகாவும் பேசினர். ‘பரதனே’ என்ற அணியில் மதுரை ரேவதி சுப்புலட்சுமி, சென்னை தெய்வானை பேசினர். ‘கும்பகர்ணனே’ என்ற அணியில் ராஜபாளையம் கவிதா ஜவஹர், ஆடிட்டர் தெய்வநாயகி ஆகியோர் பேசினர்.

இந்த விழாவில், புதுக்கோட்டை கம்பன் கழகம் சார்பில் திருப்பூர் கம்பன் கழகத் தலைவர் திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்களுக்கு ‘கம்பன் மாமணி’ என்ற விருது வழங்கப்பட்டது. விழாவில் கம்பன் கழகப் பொருளாளர் திரு. சிவராம், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் திரு. கே.எம்.சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றினர். முடிவில் கம்பன் கழகத் துணைச் செயலாளர் திருமிகு. கவுசல்யா நன்றி கூறினார்.

குழந்தைக்கு ஊட்டுங்கள் தன்னம்பிக்கை!

குழந்தைக்கு நடைவண்டி வாங்கித் தந்து நடை பழகச் செய்வார்கள் சில பெற்றோர்கள். இன்னும் சில பெற்றோர்கள், தங்கள் குழந்தை தானாக நடக்கும் வரை காத்திருப்பார்கள். நடக்கத் தொடங்கும்போது சில சமயம் குழந்தை தடுமாறி விழும். அப்போதுகூடப் பதறி ஓடிக் கைகொடுத்துத் தூக்கிவிட மாட்டார்கள். குழந்தைக்கு விளையாட்டுப் பொருட்களைக் காண்பித்து மீண்டும் நடக்க வைக்க முயற்சி செய்வார்கள். இப்படி வளரும் குழந்தைகளே யாரையும் எதற்கும் சார்ந்திருக்காமல், தன்னம்பிக்கையோடு வளரும்.

சுய ஆளுமைத் தன்மையுள்ள குழந்தையால்தான் புதிய முயற்சிகளைத் தன்னம்பிக்கையுடன் செய்ய முடிகிறது. குழந்தைகளுக்கு உணவு ஊட்டுவதைவிட முக்கியமானது, அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவது! குழந்தை உங்கள் மடியிலிருந்து தவழ்ந்து தரைக்கு இறங்கி, பேசப் பழகி, நடை பயில ஆரம்பிக்கும் பருவத்திலேயே அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதைக் கவனமாகச் செய்ய வேண்டும். அதற்கான வழிகள் இங்கே:

- குழந்தைகள் எப்போதும் துறுதுறுவென எதையாவது திறந்து ஆராய்ந்துகொண்டே இருப்பார்கள். வரவேற்பறை அடுக்குகளில் இருக்கும் பொருட்களும், கிச்சன் அயிட்டங்களும் அவர்களின் விருப்பத்துக்குரியவை. ஒவ்வொன்றையும் எடுத்து, தங்கள் கற்பனைக்கு ஏற்றபடிப் பயன்படுத்துவார்கள். இதெல்லாம் அவர்கள் தன்னம்பிக்கையை தானாகவே வளர்த்துக் கொள்ளும் வழிகள். அவர்கள் கையிலிருந்து எதையும் பிடுங்காதீர்கள். ஆனால் ஆபத்தில்லாத பொருட்களை பயன்படுத்துகிறார்களா என்பதை மட்டும் பாருங்கள்.

- அதட்டி, மிரட்டி எப்போதும் கட்டுப்படுத்தி வைத்திருந்தால்தான் குழந்தை பயப்படும், ஒழுங்காக இருக்கும் என்றெல்லாம் கற்பனையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். உங்களுடைய நிபந்தனையற்ற அன்பு அவர்களுடைய தன்னம்பிக்கைக்கு முக்கியமாகத் தேவை. குழந்தைகள் மீது நீங்கள் மிகுந்த அன்பு செலுத்துகிறீர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதை மறைத்து வைக்காதீர்கள். குழந்தைகளுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- குழந்தைகளைக் கண்டிப்புடனும் கட்டுப்பாட்டுடனும் வளர்க்க வேண்டும் என்கிற நோக்கத்தில், அவர்களின் சுதந்திரமான செயல்பாடுகளுக்குத் தடைபோட்டு விடாதீர்கள். எதைச் செய்ய வேண்டும் என்று சொல்வதைவிட, எதைச் செய்யக் கூடாது என்று சொல்வதுதான் பெரியவர்களிடம் அதிகமாக இருக்கிறது. 'இதைச் செய்யாதே', 'அதைச் செய்யாதே' எனப் பொத்திப் பொத்தி வளர்க்கப்படும் குழந்தைகள், பெரியவர்களானதும் பாதுகாப்பற்ற நிலையினையே உணர்கிறார்கள். குழந்தைப் பருவத்தில் விதிக்கப்பட்ட தடை உத்தரவுகள் அனைத்தும் ஆழ்மனப் பதிவுகளாகி, நம்மால் முடியாது என்ற அவநம்பிக்கையை விதைத்து விடுகிறது.

- குழந்தையிடம் பேசுவதற்கு முன் நன்றாக யோசித்து, சரியான சொற்களையே தேர்ந்தெடுங்கள். குழந்தை

ஏதேனும் குறும்பு செய்தால் அல்லது அபத்தமான கேள்விகளைக் கேட்டால் ‘முட்டாள் மாதிரி செய்யாதே’, ‘நீ ரொம்ப பிடிவாதம்’ என்று கடிந்து கொள்ளாதீர்கள். இப்படி அடிக்கடி கூறுவதால் ‘நாம் அது மாதிரிதானோ’ என்ற எண்ணம் குழந்தையிடம் ஏற்படலாம்.

● குழந்தையின் காதுபட எவரிடமும் குழந்தையைப் பற்றிக் குறை சொல்லாதீர்கள். ‘சாப்பிட அடம் பிடிக்கிறாள்... ஐஸ்கிரீம் கேட்டு அழுகிறாள்...’ என்று அடுக்கி விடாதீர்கள். அப்புறம் ‘பெற்றோருக்கு நம்மைப் பிடிக்கவில்லை’ என்று குழந்தை எண்ண ஆரம்பித்து விடும். இந்த எண்ணம் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

● எதற்காகவும் குழந்தையைப் பயமுறுத்தாதீர்கள். ஒரு குழந்தை தைரியமற்ற முறையில் வளர்க்கப்பட்டால், கூச்ச சுபாவம் வந்துவிடும். தன் கருத்துகளைத் தெளிவாகக் கூற இயலாத தவிப்போடு அவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆவார்கள். வாழ்க்கையில் எந்தத் தடைகளையும் எதிர்கொள்ள முடியாமல் திகைப்பார்கள்.

● குழந்தை எதைப் பற்றியாவது வெளியிடும் அதன் பயம் அல்லது பாதுகாப்பின்மையை முழு மனதோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அந்தப் பயம் அர்த்தமற்றதாக இருப்பினும் அதை அலட்சியப்படுத்தாதீர்கள். உதாரணமாக, குழந்தைக்கு அறிவியல் பாடம் சிரமமாக இருப்பதாகக் கூறினால், அதை எளிதாகச் சமாளிக்க உதவுவதாகக் கூறி ஆறுதல் படுத்துங்கள்.

● எதைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதில் சில ஒழுங்குகளைப் புகுத்துங்கள். உதாரணமாக வீட்டுப் பாடங்கள் செய்வது மற்றும் விளையாட்டுகளில் சில விதிமுறைகளை நிர்ணயித்து விடுங்கள். அவற்றை முறையாகக் கடைப்பிடிக்கப் பழக்குங்கள். அவர்கள் சரியாகச் செய்யும்போது தட்டிக் கொடுத்துப் பாராட்டுங்கள்.

● குழந்தைகளுக்கு எதையாவது செய்வதற்குமுன் அவர்களிடம் கலந்தாலோசியுங்கள். “அவனுக்கு என்ன தெரியும்? இதையெல்லாம் போய் எதுக்கு அவன்கிட்ட கேட்டுக்கிட்டு...” என அலட்சியம் செய்யாதீர்கள். முடிவெடுப்பது நீங்களாகவே இருக்கட்டும்; ஆனால் அவர்களிடம் கலந்துரையாடுங்கள். இந்த முடிவு சரியானதுதான் என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள். அது அவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும். தனது கருத்தும் கேட்கப்படுகிறது என்பது அவர்களைப் பொறுப்புள்ளவர்களாக்கும்.

● குழந்தைகள் பேசும்போது மிகுந்த உன்னிப்பாகக் கவனிக்கும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஆர்வம் இல்லாத விஷயமாக இருந்தாலும், தன் நண்பர்கள், பள்ளியின் அன்றைய நிகழ்வுகள் போன்றவை பற்றி அவர்கள் விவரிக்கும்போது அக்கறையுடன் கவனியுங்கள்.

● வீட்டில் சின்னச்சின்ன வேலைகளில் குழந்தைகளை ஈடுபடுத்துங்கள். சமையலில் உதவுவது, வீட்டைச் சுத்தம் செய்வது, படுக்கையைச் சரி செய்வது என எதுவானாலும் பரவாயில்லை... இவையெல்லாம் குழந்தையின் தன்னம்பிக்கையை வெகுவாக வளர்க்கும்.

● குழந்தைகளுக்கு நல்ல செயல்களைக் கற்றுக் கொடுங்கள். பிறருக்கு உதவுதல், பிறரை மதித்தல் போன்ற பண்புகளுக்கு நீங்கள் முன்மாதிரியாக இருங்கள். வயதான வேலைக்காரரை நீங்கள் மரியாதைக்குறைவாகத் திட்டினால், உங்கள் குழந்தையும் அப்படியே திட்டும். அவர்களுடைய குணங்களை நல்ல முறையில் கட்டி எழுப்புங்கள்.

● ஏதேனும் ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்கும்போது குழந்தையைப் பாராட்டுங்கள். இதனால் தன்னம்பிக்கை உண்மையிலேயே அதிகரிக்கிறது. ஒரு செயலை வெற்றிகரமாக செய்து முடிக்கும் போதுதான், தங்களால் எது முடியும், எது முடியாது என்பதை குழந்தைகள் உணர்கிறார்கள். அவர்கள் எதையாவது தவறாகச் செய்தால், நீங்கள் தலையிட்டுச் சரியாகச் செய்யாமல், அதை அவர்களே சரியாகச் செய்வதற்கு நீங்கள் வழிகாட்டுங்கள். போதுமான வாய்ப்புகளை வழங்குங்கள். அப்போதுதான் அவர்கள் தங்களின் தவறுகளைத் திருத்திக் கொள்வார்கள்.

● அதிகமான வாய்ப்புகள், நல்ல ஆலோசனைகள், பொறுமையான அணுகுமுறை போன்றவை பெற்றோர்களிடமிருந்து கிடைத்தால், ஒரு குழந்தை தனது அடிப்படைத் திறமையை நன்றாக வளர்த்துக் கொள்ளும். இதனால், எதிர்காலத்தில் சவால்களை அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்வார்கள். குழந்தைகளின் பின்னால் நின்று, உங்களின் அசாத்திய பொறுமையின் மூலம் அவர்களுக்கு ஆதரவு தாருங்கள். ●

உங்களை நம்புங்கள்!

பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தது ஒரு நான்கு வயதுக் குழந்தை. மெலிந்து நோஞ்சானாக இருந்தது. பூங்காவில் இருந்த ஒரு விளையாட்டு அந்தக் குழந்தையை ஈர்த்தது. அது ஒரு சுவர். சின்னச் சின்ன கற்களும் கட்டைகளும் அதில் பதித்திருந்தனர். அவற்றைப் பிடித்துக்கொண்டு அந்தச் சுவரில் மேலே ஏற வேண்டும். கொஞ்சம் பெரிய குழந்தைகளுக்கான விளையாட்டு அது.

இந்த நோஞ்சான் குழந்தை அதில் ஏறப் போனது. பார்த்துக் கொண்டிருந்த பலரும் பதறிவிட்டனர். எங்காவது தவறுதலாகக் கை, காலை வைத்து அடிபடப் போகிறது என்று கவலைப்பட்டனர். "பாப்பா! அதில் உன்னால் ஏற முடியாது. பத்திரமா கீழே இறங்கு" என்று சிலர் கூப்பிட்டனர்.

விளையாட்டுச் சுவாரசியத்தில் அந்தக் குழந்தை எதையும் காதில் வாங்கவில்லை. மற்ற பெரிய பையன்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தது. அதேபோலக் கட்டைகளைக் கைகளால் பிடித்தபடி, சுவரில் இருந்த கற்களில் கால்களைப் பதித்து ஏற ஆரம்பித்தது. ஒவ்வொரு அடியை எடுத்து வைத்து ஏறும்போதும், அடுத்து எந்தக் கட்டையைப் பிடிக்க வேண்டும் என்று திட்டமிட்டது. எங்கே கால்களைப் பதிக்க வேண்டும் என்று தீர்மானித்தது. கொஞ்சம் கொஞ்சமாக அது சுவரில் ஏறி உச்சிக்குச் சென்றது. சுவரின் அடுத்த பக்கத்தில் இருந்த படிகளில் இறங்கி உற்சாகமாக வேறு எங்கோ போய்விட்டது. பார்த்துக்கொண்டிருந்த அனைவரும் திகைத்துவிட்டனர்.

அந்தக் குழந்தையால் எப்படி ஏற முடிந்தது? இரண்டு காரணங்கள். ஒன்று, "உன்னால் முடியாது" என்று எல்லோரும் சொன்னது அதன் காதில் விழவில்லை. இரண்டு, 'தன்னால் ஏறிவிட முடியும்' என அந்தக் குழந்தை முழுமனதாக நம்பியது. அதற்காகக் கச்சிதமாகத் திட்டமிட்டு முயற்சி செய்தது.

எவ்வளவு நீண்ட பயணமும் ஒற்றைக் காலடியை எடுத்து வைப்பதில்தான் தொடங்குகிறது. ஆரம்பத்தில், நம் இலக்கு தொலைதூரத்தில் இருப்பதாகவும் சாத்தியம் இல்லாததாகவும் தோன்றலாம். 'உங்களால் இது முடியாது' என்று பலரும் சொல்வார்கள். நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களே கூட இப்படிச் சொல்லக்கூடும். தன்னம்பிக்கை இருப்பவர்கள், இதையெல்லாம் புறக்கணித்துவிட்டுப் பயணத்தைத் தொடர்கிறார்கள்.

முதல் அடியை எடுத்து வைத்து 10, 100 என ஒவ்வொரு அடியாக முன்னேறும்போது, இலக்கு கண்களுக்குத் தெரிய ஆரம்பிக்கும்.

'உங்களால் முடியாது' என்று சொன்னவர்களைவிட நீங்கள் வலிமையானவர் என்று இதற்கு அர்த்தம் இல்லை. வித்தியாசம் என்னவென்றால், உங்களை நீங்கள் நம்புகிறீர்கள். முழுமையான நம்பிக்கையுடன் முயற்சியில் இறங்குகிறீர்கள். அதுதான் இதைச் சாத்தியமாக்கியது.

மனம் என்ன நினைக்கிறதோ, அதுவே நிகழும். 'நம்மால் முடியாது' என நினைத்தால் அப்படித்தான் ஆகிவிடும். 'நம்மால் முடியும்' என்று நம்பிக்கை கொண்டால், அது சாத்தியமாகும்.

உங்களை நம்புங்கள். உன்னதமான உயர்வு கிடைக்கும்●

Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL

SUKRA SUPER FINE COTTON VESTS | ROMEX SUPERIOR BANIANS | RISE-UP PREMIUM BANIANS | ACOSTE LUXURY INNERWEARS | Breeze Eye Let Vests | WinStripe STRIPED BANIANS | ARCHERY GYM VEST | COMPACT PREMIUM COTTON RIB VESTS | LITTLE STARS KIDS INNERWEARS

Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-10-2025. Posted at Tirupur BPC on 5th of every month.